Registered as a NewsPaper

2 [illegible] JUL 2004

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–09 | 24–07–2004 | சனிக்கிழமை | ஓசை –157




## மருத்துவப் பிரிவின் தேவை குறித்த

# தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனமான சிந்தனை

# எமது மக்களையும், போராட்டத்தையும் காத்தது!



## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

(புதுக்குடியிருப்பு)

**ஆரம்பம் முதலே மருத்துவப்பிரிவின் தேவை குறித்த எமது தேசியத் தலைவரின் தீர்க்கதரிசமான சிந்தனை எமது மக்களையும், போராளிகளையும், போராட்டத்தையும் காத்தது என அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் வைத்தியசாலை நவீன வசதிகளைக் கொண்ட கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.**

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது;

மரநிழல்களிலும் ஓலைக் கொட்டில்களிலும் இருந்து எமது மருத்துவர்கள் எங்கள் போராளிகளையும், மக்களையும் காத்தநாட்களை மறந்து விடமுடியாது. எமது மக்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வருகின்றபோது எதிரியின் குண்டுவீச்சுக்களாலும், தொற்று நோய்களினாலும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த நேரங்களில் எல்லாம் எமது தேசியத் தலைவர் எம்மை அழைத்து போராளிகளைக் காப்பாற்றுவது போல் "போராட்ட சூழலுக்குள்ளே நெருக்கடிப்பட்டுக் கொண்டிருக்கின்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## தனது அரசியல் எதிர் காலம் முடிவுறும் நிலையை மாற்றச் சந்திரிகா முயற்சி

தனது தற்போதைய பதவிக்காலம் முடிவடைந்த பிற்பாடு தேர்தலில் தனது அர்சியல் எதிர்காலம் முற்றுப்புள்ளி பெற்றுவிடும் என்ற நிலையை மாற்றுவதற்கான முயற்சிகளிலே சந்திரிகா தற்போது அதிக கவனம் செலுத்தி வருவதாக இணையத்தளச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

ஒருவர் இரண்டு முறையே சனாதிபதியாகப் பதவி வகிக்க முடியும் என்ற வகையில் 2005ம் ஆண்டுடன் முடிவடையும் தனது பதவிக்காலத்தின் பின் சந்திரிகாவால் சனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாத நிலை தோன்றியுள்ளது.இந்த நிலையில், கிழக்கில் பதட்ட நிலையைத் தோற்றுவித்து புலிகளை மீண்டும் யுத்தத்திற்கு இழுத்து அவசர காலச் சட்டத்தை பிரகடனப்படுத்துவதன் (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையின் நவீன வசதிகளைக் கொண்ட புதிய கட்டடம் திறப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் உள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் நவீன வசதிகளைக் கொண்ட புதிய கட்டத்திறப்பு விழா நேற்றுக் காலை 9.45 மணிக்கு டாக்டர் சிவபாலன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக,பொதுச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் ஏற்றி வைக்க, தேசியக்கொடியை நிதிப்பொறுப்பாளர் பாலதாஸ் ஏற்றிவைக்க , டாக்டர் பொன்னம்பலம் அவர்களின் உருவப்படத்திற்கு டாக்டர் கெங்காதரன் அவர்கள் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

இதனையடுத்து புதிதாக அமைக்கப்பட்ட நவீன வசதிகளைக் கொண்ட புதிய கட்டடத் தைத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் திறந்துவைத்தார். தொடர்ந்து வைத்தியர்களால் நோயாளர்களுக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்நிகழ்வில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கதிரவெளியில் புலிகளின் ஆதரவாளர் தேசவிரோதிகளால் சுட்டுக்கொலை

வாகரை புளியங்கண்டல் கதிரவெளியில் வைத்து சீனித்தம்பி மகாலிங்கம் (வயது-28) என்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் தேசவிரோதசக்திகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவரது நிலைதொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் இவரது குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த கவலையை தெரிவித்ததோடு இந்த தேசவிரோதிகளை எம்மத்தியில் இருந்து அகற்றுவது அனைவரது தலையாய கடமை எனவும் தெரிவித்துள்ளனர்.

இவ்அறிக்கையில் எமது தேசியத்தைப் பாழடையச் செய்யும் நோக்குடன் செயற்படும் இந்தத் தேசவிரோத சக்திகளை மக்கள் இனங்கண்டு இவர்களை எம்மத்தியில் இருந்து வெளியேற்ற தேசியத்தில் பற்றுள்ள அனைவரதும் தலையாய கடப்பாடாகும்

(12ஆம் பக்கம் பார்க்க)

### -ஆசிரியப் போட்டிப் பரீட்சை

## வன்னி பெருநிலப்பரப்பில் தமிழீழ நேரம் 9.00 மணிக்கு

ஆசிரியப் போட்டிப் பரீட்சை முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய், வவுனியா வடக்கு, மடுவலயம் உள்ளடக்கிய வன்னிப் பெருநிலப்பரப்பு பகுதியில் தமிழீழ நேரம் 9.00 (சிறிலங்கா நேரம் 9.30) மணிக்கு ஆரம்பமாகும்.இப் பிரதேசத்தில் இருந்து விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளும் இந் நேரத்தை. கவனத்திற்கொண்டு பரீட்சை தொடங்கும் நேரத்திற்கு 30 நிமிடம் முன்னதாக மண்டபத்திற்கு சமுகமளித்து பரீட்சைக்கு தோற்றும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



## யாழ்.இல் சிறப்புடன் நினைவு கூரப்பட்ட மாவீரர் லெப்.செல்லக்கிளியின் நினைவுநாள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லாத்தாக்குதல் தலைவர் மாவீரர் லெப்டினன்ட்- செல்லக்கிளி அம்மானின் 21 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் மிகச்சிறப்பான முறையில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.


அந்தவகையில் செல்லக்கிளி அம்மான் சிறிலங்காப்படையினர் மீது தாக்குதல் நடத்தி வீரச்சாவடைந்த திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்தியில் அவர் நினைவாக நிறுவப்பட்டுள்ள நினைவுத்தூபியில் காலை 9.00 மணியளவில் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.


சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீரதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுடரினை யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைக்க, தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் ப. பகீரதன் மற்றும்அதன் இணைப்பாளர் குகன் ஆகியோர் செல்லக்கிளி அம்மானின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்தனர். மாலை நிகழ்வுகள் 6.00 மணியளவில் சங்கிலியன் தோப்பு நல்லூர் பகுதியில் புலேந்திரராசா தலைமையில்


(12ஆம் பக்கம் பார்க்க)


# புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவ மனையில் நவீன வசதிகளைக்கொண்ட புதிய கட்டடம் திறப்பு












## வரிவிளம்பரம்

### மீட்டல் வகுப்பு (2005 A/L)

உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இயங்கும் கேம்பிறிஜ் கல்லூரியில் நடைபெறுகின்றது. (4634)

### தவறிவிட்டது

புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமிர்தநாயகம் றொபின்சன் டினேஸ் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (இல 821324158V) போக்குவரத்து அனுமதி அட்டையும் பணப்பையுடன் புதுக்குடியிருப்பு நெடுஞ் சாலை வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம்பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றேன். (சி.4671).

### பெற்றுக்கொள்ளவும்

முல்லைத்தீவு முதன்மைச் சாலையில் உள்ள புவி மணிக் கூட்டுத் திருத்தகத்தில் திருத்துவதற்காக தரப்பட்ட மணிக்கூடுகளை 21.07.2004 தொடக்கம் 21.08.2004 இற்குள் பெற்றுக் கொள்ளுமாறு மணிக்கூட்டுத் திருத்தக உரிமையாளர் புவி கேட்டுக் கொள்கிறார். கடை இடமாற்றம் செய்யப்படவுள்ளது. விபரங்களை 21.07.2004 ஈழநாதம் பத்திரிகையைப் பார்க்கவும். (சி-4672)

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத் தேவையான தென்னை, மாதுளை, பலா, மா, எலுமிச்சை (தேசி), தோடை, கயூ, கமுகு, கொய்யா, கொடித்தோடை, நெல்லி,சவுக்கு,சமண்டலை, தவசி, அகத்தி, கறிவேப்பிலை, தூதுவளை, பப்பாசி (றெட்லேடி) போன்ற பலதரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (9895)

### தவறிவிட்டது

எதிர்மலசிங்கி ஜோஜ்வில்வராசா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல 592342952V) கடந்த 18.07.2004 அன்று காலை 7.00 மணியளவில் முகமாலை சோதனைச்சாவடியில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் க.தெ.ப.நோ.கூ. சங்கத்தில் ஒப்படைக்கவும்.தகவல் ஜோஜ் வில்வராசா, இலக்கம் 778, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி. (சி.4645)


### விபத்தில் படுகாயம்

வள்ளிபுனம் நடன மிட்டான் ஆலயத்திற்கு அண்மையாக நேற்று முன்தினம் 1.00 மணிக்கு ஏற்பட்ட விபத்தில் உந்துருளியுடன் வந்தவர் தலைப்பகுதியில் படுகாயமடைந்து வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

வேகமாக வந்த உந்துருளி ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து பாலத்துடன் மோதியதில் மேற்படி சம்பவம் இடம்பெற்றது. (19)

## சென்னைப் பேராசிரியர் அரசு இன்று கிளி.யில் கலந்துரையாடல்

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவரும் நாடகத் துறைப் பேராசிரியரும் ஊடகவியலாளருமான வீ.அரசு இன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தமிழீழக் கல்விக்கழக மண்டபத்தில் ஒரு கலந்துரையாடலை நிகழ்த்தவுள்ளார்.

ப்டைப்பாளிகள் தமிழ்மொழி ஆர்வலர்கள் நாடகக்கலைஞர்கள் ஊடாகவியலாளர் அனைவரையும் இக்கலந்துரையாடலில் பங்கு கொள்ளஏற்பாட்டாளர்கள் அழைக்கின்றனர்.

வீ.அரசு தமிழகத்தின் முன்னணி நாடக இயக்குனரான அ.மங்கையின் கணவர் இவர் மங்கையுடன் இணைந்தும் தனியாகவும் பல நாடகங்களை இயக்கியுள்ளார். குறிப்பாக கவிஞர்இன்குலாப் நாடகத்தை அரசு இயக்கி பலருடைய பாராட்டுகளையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## இன்று கிளி. மகாவித்தியாலயத்தில் மணிமேகலை பிரசுர புத்தகக்கண்காட்சி

(கிளிநொச்சி)

'தமிழகத்தின்' மணிமேகலைப்பிரசுரம் நிறுவனம் புத்தக வெளியீட்டு நிறுவனத்தினரின் 500இற்கும் கூடுதலான வெளியீடுகளை உள்ளடக்கிய புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்று பகல் 1.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய மாடியில் நடைபெற் இருக்கின்றது.

அறிவுஅமுது நிறுவனத்தினரின் ஒத்துழைப்புடன் தமிழீழக் கல்விக்கழகத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற இருக்கும் இப்புத்தகக் கண்காட்சி மேற்படி பிரசுரநிறுவனரான அறிஞர் தமிழ் வாணனின் மகன் ரவி தமிழ்வாணன் முன்னின்று நடத்துகின்றார்.

# பிரிட்டனின் படைக் குறைப்பு திட்டம்
# பத்தாயிரம் பேர் வேலையிழக்கநேரிடும்

(லண்டன்)

**பிரிட்டனின் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு தனது இராணுவப் படையைக் குறைக்க திட்டம் முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனடிப்படையில் படைவீரர்கள் உட்பட இராணுவத்தில்பணிபுரிபவர்கள். சாதாரண மனிதர்கள் 10 ஆயிரம் பேர் வேலை இழக்கநேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.**

இதனால் கடற்படையிலுள்ள 12 போர் கப்பல்கள் ஓய்வு பெறும். விமானப்படையில் பல ஜெட் விமானங்கள் சேவையிலிருந்து மாற்றப்படும்.1941 இல் வட்லாப் பிரிட்டனின் முக்கிய பங்கு வகித்த கிழக்கு இங்கிலாந்தின் கொட்டில்கா தளம் முற்றிலுமாக இல்லாது போகும்.

நவீன ஆயுதங்கள் உப கரணங்களுமுடைய பாதுகாப்பிற்கு அத்தியாவசியமாகவுள்ள சிறு படையே போதும் எனும் எண்ணம் ஏற்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் இயர்போன் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தை சில பிரிட்டிஷ் மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். வேறு சிலர் சண்டையை விட சமாதானத்திற்குத்தான் அதிக படைகள் தேவைப்படும் என்றும் அதற்கு ஈராக்கே சாட்சி என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.



அடை மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினூடே துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்யும் பங்களாதேஷ் வாசி ஒருவர் விழுந்து எழும்புகிறார்.

## இஸ்ரேலில் உள்ள யூதர்களில் அதிகளவானோர் ஏரியல் ஷெரோனின் மரணத்தை விரும்புகின்றனர்

### -தனியார் நிறுவனம் கருத்துக் கணிப்பு

இஸ்ரேலிலுள்ள யூதர்களில் 200க்கு 150பேர் ஏரியல் ஷெரோனின் மரணத்தை விரும்புகின்றனர்.

இதனை டெல்அவிவைச் சேர்ந்த சிம்பட் எனும் தனியார் நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பு மூலம் தெரிவித்திருக்கின்றது.

கருத்துத் தெரிவித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் மேற்கு கரையை சேர்ந்தவர்கள் என்றும் சிறு பகுதியானோர் காசா பிரதேசத்தில் வசிப்பவர்கள் என்றும் சிம்பட்தனியார் நிறுவன இயக்குனர் அவிறிக்கட் விளக்கமளித்துள்ளார்.

இஸ்ரேலின் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு குழுவிடம் இது தொடர்பான தகவல்கள் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர்கூறியுள்ளார்.

## பிரான்ஸில் வலுவடைகிறது தீவிரவாத அச்சுறுத்தல்; யூதர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டும்

### -இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன்

"பிரான்ஸில் தீவிரவாத அச்சுறுத்தல் வலுவடைந்து வருவதால் அங்குள்ள யூதர்கள் உடனடியாக இஸ்ரேலுக்கு இடம் பெயர வேண்டும்" என்று இஸ்ரேல் பிரதமர்ஏரியல் ஷெரோன் கருத்துக் கூறியிருந்தார்.

இதனையடுத்து ஏரியல் ஷெரோன் தான் கூறிய கருத்துக்களுக்கு உடனடியாக விளக்கம் தரவேண்டும். அவ்வாறு விளக்கமளிக்க மறுத்தால் இஸ்ரேலுடனான உறவுகளை பிரான்ஸ் மறுபரிசீலனை செய்ய நேரிடும் என்று பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் மைக்கல் பெரடோ கூறியுள்ளார்.

வானொலி ஒன்றிற்கு நேற்று முன்தினம் பேட்டியளித்த பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர், ஷெரோனின் விளக்கத்திற்காக எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் கடந்த சிலநாட்களுக்கு முன்பே பிரான்ஸில் தீவிரவாத அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தானில் பாமுகோவாவில் நிகழ்ந்த கடுகதி ரயில் விபத்தையடுத்து மீட்புப் பணிக்காக செல்லும் ரயில்வே ஊழியர்கள்.

## ஈராக், ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல் செலவுகளை மதிப்பிடுவதில் தவறு ஏற்பட்டுள்ளது

### -மக்கள் சபைக்குழு குற்றச்சாட்டு

ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய இரு நாடுகள் மீதும் அமெரிக்கா நடத்திய போர்ச் செலவுகளை மதிப்பிடுவதில் தவறு ஏற்பட்டிருப்பதாக மக்கள் சபைக்குழு குற்றம் சாட்டியுள்ளது.

இதன் காரணமாக 12.3 பில்லியன் டொலர்கள் தற்போது துண்டு விழுந்துள்ளது. இதனால் வெவ்வேறு இடங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளில் இருந்து எடுத்து சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


அப்படியும் பென்டகன் கையில் இந்த வகையில் இருப்பது ஐந்து பில்லியன் டொலர்கள் தான் தேவைப்படும் 7.3 பில்லியன்களை அடுத்தாண்டுக்கான ஒதுக் கீட்டிலிருந்தும், அடுத்தாண்டுக்கான செலவுகளுக்கு, அதற்கடுத்தாண்டு ஒதுக்கீட்டிலிருந்தும் செலவழிந்து வந்தால் கடைசியில் ஓர் ஆண்டிற்கு நிதி இல்லாமல் போகும் அபாயம் ஏற்படுமென்று வரவு, செலவுத் திட்டத்தலைவர் ஜோன் பிராட்கூறியுள்ளார்.

2003ஆம் ஆண்டில் ஈராக், ஆப்கானிஸ்தான் போர் செலவுக்கான மக்கள் சபை 87 பில்லியன் டொலர்களை ஒதுக்கியமை குறிப்பிடத்தக்கது. ஆனால் 99.3 பில்லியன் செலவிடப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மக்கள் சபை கவலையுடன் அவதானித்துள்ள மற்றோர் விடயம், பல செலவுகள் வெளிப்படையாக செய்யப்படவில்லை சில சில்லறைச் செலவுகள் எனும் தலைமையின் கீழ் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் அதன் விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்று மக்கள்சபை குறை கூறியுள்ளது. இனி தேவைகளை தெளிவாக குறிப்பிட்டு கோரிக்கைகளை முன்வைக்குமாறு மக்கள் சபை பாதுகாப்புச்சபைக்கு அறிவுறுத்தியுள்ளது.



இஸ்ரேலிய இராணுவத்தாக்குதலில் சேதமடைந்த வீட்டுக்குமுன்பாக நடந்து செல்லும் பெண்ணும் அவரது பிள்ளைகளும்.



ஈராக்கில் பணயக் கைதியாக இருந்து விடுதலை செய்யப்பட்ட பிலிப்பினோ ட்ரக்சாரதியும் அவரது குடும்பத்தினரும்

## ஆபிரிக்க மக்களை அரபு இராணுவத்திடமிருந்து பாதுகாக்க ஐ.நா.பாதுகாப்பு சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்

### அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை தீர்மானம்

சூடானில் இன ஒழிப்பை இலக்காகக் கொண்ட தாக்குதல்கள் நடைபெற்று வருவதாகவும் அந்த நாட்டின் டாபர் பகுதியிலுள்ள ஆபிரிக்கமக்களை அரபு இராணுவத்திடமிருந்து பாதுகாக்க ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள்சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.பிரதிநிதிகள் அனைவரும் இந்த பிரேரணையை ஆதரித்துவாக்களித்துள்ள அதேசமயம், சூடானின் டாபர்பிரதேசம் உலகின் மிக மோசமான மனிதாபிமான நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது என்று தெரிவித்த ஐக்கியநாடுகள் சபை இந்த நெருக்கடி நிலையை இன ஒழிப்பு என இது வரை குறிப்பிடவில்லை.ஐக்கிய நாடுகள் சபை இல்லாது அதனைக் குறிப்பிட்டால் அதற்கு எதிராக உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அதற்கு ஏற்படும்.

டாபர்பிரதேசத்திலுள்ள கறுப்பின ஆபிரிக்க மக்களிற்கும் அரபு இராணுவத்தினருக்குமிடையே 15 மாத காலமாக நடைபெற்றுவரும் மோதல்களின் காரணமாக 30 ஆயிரம் மக்கள் இறந்திருக்கலாமென்றும் 10 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்திருக்கலாமென்றும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அறிவித்துள்ளது. இதற்கிடையில் சூடான் விவகாரத்தில் அமெரிக்காவோ அல்லது பிரிட்டனோ தலையிடக்கூடாதென்று அந்நாடு எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் டாபர் விவகர்ரம் உள்நாட்டுப்பிரச்சினையாகுமென்று சூடான் வெளிவிவகார் அமைச்சர் முஸ்தபாஸ்மாயில் பாரிசில் தெரிவித்துள்ளார்.சூடான் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண முடியும்என்பது பற்றி கொபி அனானுடன் ஆராய நியூயோர்க் சென்றுள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் இந்தவிவகாரம்சம்பந்தமாக ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா தீர்மானம் ஒன்றைக்கொண்டுவரும் என்றும் தெரிவித்துள்ளார்.



ஈராக்கின் புனரமைப்புப் பணிகளுக்காக 400 பில்லியன் டொலரை வழங்க அமெரிக்கா அறிவித்துள்ள நிலையில் அமெரிக்க -ஈராக் கூட்டுப் படைவீரருடன் உரையாடும் ஈராக்கியர் ஒருவர்.

## மாவட்ட அரசியல்துறையின் ஏற்பாட்டில்

# திருமலை சந்தோசபுரம் கிராம மக்களின் மேம்பாட்டிற்காக 3 நாள் கிராமிய பாசறை

(திருகோணமலை)

**மூதூர் கிழக்கு, சந்தோசபுரம் கிராம மக்களின் மேம்பாட்டிற்காக மூன்று நாள் கிராமமேம்பாட்டு வேலைத்திட்டக் கிராமியப் பாசறை வியாழக் கிழமை ஆரம்பமானது. விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை இக்கிராமியப் பாசறையை ஒழுங்கு செய்துள் ளது.**

அரசதிணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய வற்றின் பிரதிநிதிகள் இக்கிராமியப் பாசறையில் பங்கு பற்றுகின்றனர். சந்தோஷபுரம் மக்களின் அத்தியா வசிய தேவைகளை இனங்காணு தல், குறைபாடுகளைக் கண்டறிந்து பாரிகாரம் காணல் ஆகியன கிரா மியப் பாசறையின் முக்கிய நோக்க மாகும் என்று திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

பாசறையின் முதல் நாளான வியாழன் அப்பகுதி மக்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், தேசிய அடையாள அட்டை ஆகி யன தொடர்பான நடமாடும் சேவை நடத்தப்பட்டது. இரண்டாம் நாள் பாசறையின் போது கருத்தூட்டல் நிகழ்வு இடம் பெற்றது.

மூன்றாம் நாள் பாசறையின் போது கிராமத்தின் தேவைகள் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தோஷபுரம் கிராமம் மிகவும் பிற்போக்கானது என்பதும் அத்தி யாவசிய வசதிகளற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (25)

## சிரமதானப்பணிக்கு அழைப்பு

(கிளிநொச்சி)

யூலை மாத உலர் உணவு விநி யோகத்திற்கான சிரமதானப் பணிகள் இன்று திருவையாறு பிரதேசத்திலும், இன்றும் நாளையும் புது முறிப்புக் கிராமத்திலும் நடைபெறும் எனவும் இதில் இப்பிரதேச மக்களைக் கலந்து கொள்ளுமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (15)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(ஒட்டுசுட்டான்)

சமகால அரசியல் கருத்தரங்கு சின்னச்சாளம்பன் மற்றும் பெரிய சாளம்பன் மக்களிடையே நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை 4.30 மணியளவில் அன்பழகன் முன்பள்ளியில் ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர் வே.தயாபரன் தலைமையில் இது நடைபெற்றது.

இதில் இக்கிராம மக்களின் அபிவிருத்தி தொடர்பாகவும் ஆராயப் பட்டது. கருத்துரைகளை முல்லை. மாவட்ட கிராம அபிவிருத்தி சங்கங் களின் பொறுப்பாளர் ஈழவன் வழங்கினார். (05)

## கால்வாய் நோயைக் கட்டுப்படுத்த கால்நடை உத்தியோகத்தர்கள் பெரும்பாடு

### மருந்துகளை மேலும் பெற முயற்சி

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால் நடைகளுக்கு கால்வாய் நோய் வராது தடுப்பதற்கான மருந்துகள் தருவிக்கப்பட்ட போதும் அவை குறைவாகவே வந்துள்ளன.

2400 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய வகை யிலேயே மருந்து ஊசிகள் வந்துள் ளன. இவை ஒரு தொகுதிக் கால் நடைகளுக்கே போதுமான தாக உள்ளதாக கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இதனால் முழுமையாக கால் வாய் நோயை கட்டுப்படுத்த முடி யாதுள்ளதாக அவர்கள் தெரிவித் தனர். எனினும் மிகுதி மருந்து களை அனுப்பி வைப்பதாகக் கூறப் பட்டதாக அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (20)

## வீதி விபத்தில் காயமடைந்த மாணவி சிகிச்சையின் பின் பரிதாப மரணம்

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் அண்மையில் வாகன விபத்துக்குட்பட்டு தலைப்பகுதியில் காயமடைந்த பாடசாலை மாணவி சிகிச்சைக்காக யாழ்.வைத்தியசாலைக்குச் சென்று வீடு திரும்பிய சில தினங்களில் மரணமானார்.

மேற்கூறிய வள்ளிபுனம் பாடசாலையில் கல்விகற்கும் மாணவியான உ.வசந்தி (வயது-14) என்பவரே மரணமடைந்துள்ளார்.

இவர் சிகிச்சைக்குட்பட்டு வீடு திரும்பிய பின்னர் மண்டைப்பகுதி, தோல்பகுதியில் விறைப்பு ஏற்படுவதாக கூறி நித்திரைக்கு சென்ற வேளையில் மரணமடைந்ததாகக் கூறப்படுகிறது. (19)

## போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்காக்கும் திட்டத்தின் கீழ் நாடகப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெவ் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வடக்கு-கிழக்கில் போரினால் பாதிக் கப்பட்ட சிறுவர்களின் நலன் காக் கும் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட் டத்தின் கீழ் நடாத்தப்படும் கிளி நொச்சி வலய பாடசாலைகளுக் கிடையேயான நாடகப்போட்டி எதிர் வரும் 25-07-2004 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தி யாலயத்தில் ஆரம்பமாகும்.

கோட்ட மட்ட நாடகப் போட்டி கள் 03-07-2004 கரைச்சிக் கோட்டத் திலும், 04-07-2004 பூநகரிக் கோட்டத் திலும், 10-07-2004 கண்டாவளைக் கோட்டத்திலும், 11-07-2004 பச் சிலைப்பள்ளிக் கோட்டத்திலும் நடைபெற்றன.

கோட்ட மட்டத்தில் தெரிவு செய் யப்பட்ட 22 நாடகங்கள் வலயப் போட்டியில் கலந்து கொள்கின்றன. வலய மட்டத்தில் தெரிவு செய்யப் படும் நாடகங்களுக்கு சிறுவர் நலத் திட்டத்தினால் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும். இது தொடர்பான சுற்றறிக்கை வலயக் கல்விப் பணிப் பாளர் ஊடாக, பங்கு கொள்ளும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட கல்வித் திணைக்களமும் இத்திட்டத்துடன் இணைந்து செயற்படுகின்றது. (சோ,கு)

## காக்கை வலிப்புக்கான தொடர் மருத்துவ சேவை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர் வாழ்வுச் சங்கத்தால் காக்கை வலிப்புக்கான நடமாடும் தொடர் மருத்துவ சேவையை நோர்வே நாட்டில் இருந்து வருகை தரவுள்ள நரம்பியல் நிபுணர் வைத்திய கலாநிதி சூசை ஜோசப் எதிர்வரும் 27ஆம் திகதியும், 28ஆம் திகதியும் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் 9.00மணி தொடக்கம் கிளி. மாவட்ட வைத்திய அதிகாரியின் உதவியுடன் நடத்தவுள்ளார். இதில் ஏற்கனவே சிகிச்சை பெற்ற பயனாளிகளும் தற்போது சிகிச்சை பெற வேண்டிய பய னாளிகளும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.. (சோ,கு)

## ஈச்சங்குளம் புனரமைப்பு

(கிளிநொச்சி)

அக்கராயன்ஈச்சங்குளம் உலக உணவுத்திட்டத்தின் கீழ் 4 இலட் சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனர மைக்கப்பட்டுவருகின்றது இக்குள புனரமைப்பினால் பல விவசாயி கள் பயனடையவுள்ளனர். (15)

## சாரணத் தலைவர்களுக்கான அவத்தை -01 வதிவிடப்பயிற்சி

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்டப் பாட சாலைகளில் கற்பிக்கும் சிரேஷ்ட சாரணர் தலைவர்களுக்கான அவத்தை-01 பயிற்சிநெறி வதி விடப் பயிற்சியாக நடைபெறு கின்றது.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு வவுனியா தமிழ் மத்தியமகா வித்தியாலயத் தில் ஆரம்பமான இவ்வதிவிடப் பயிற்சி ஞாயிற்றுக்கிழமை இரவு நிறைவு பெறும்.

வவுனியா மாவட்ட சாரணர் சங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட் டுள்ள இவ்வதிவிடப் பயிற்சியில் நூற்றுக்கணக்கான சிரேஷ்ட சார ணர் தலைவர்கள் கலந்து கொள் கின்றனர். (10)

## விளையாட்டுப் போட்டி

(கிளிநொச்சி)

கிளி.கோணாவில் தென்னிந்தியத் திருச்சபை பரிதோமா பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நிலைய மைதானத்தில் நடை பெறும். (கா)

## பதிவு செய்ய கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு கிரா மத்தில் காணி உறுதியற்றவர் களிற்கான பதிவுகள் நாளை (25-07-2004) ஞாயிற்றுக்கிழமை புதுமுறிப்புக் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும் எனவும், உரிய சந்தாப் பணத்தினை செலுத்தியே பதிவுகளை மேற் கொள்ள முடியும் எனவும் புது முறிப்பு கிராம அபிவிருத்திச் சங்க செய்திக் குறிப்பொன்று தெரிவிக் கின்றது. (15)

## சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பகம் மூடப்பட்டுள்ளது

(உடையார் கட்டு)

புதுக்குடியிருப்பு -வள்ளிபுனம் பகுதியில் வெதுப்பகம் ஒன்றை தமிழீழ சுகாதார சேவையினர் கடந்த செவ்வாயன்று திடீர் ஆய்விற் குட்படுத்தினர். இதன் போது இவ் வெதுப்பகம் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியது அவதானிக்கப்பட்டு வெதுப்பி உற்பத்தி செய்யப்படுவது இடை நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி ஆய்வின் போது அரிக்கப்படாமல் மாவு கழிவுகளுடன் பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டதாலும், சுகாதார நடைமுறைகளில் திருப்திகரமான சூழல் இல்லாததாலும் வெதுப்பகத்தின் உற்பத்திப் பணிகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என சுகாதார சேவை யினர் தெரிவிப்பதோடு வெதுப்பக உரிமையாளர்கள் சுகாதார நடை முறைகளை பேணுமாறும் தமிழீழ சுகாதார சேவையினர்(முல்லை) கேட்டுள்ளனர். (19)

## சாதனை வீரர்கள் கௌரவிப்பு

(கண்டாவளை)

கிளி.மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரு விளை யாட்டு நிகழ்வுகளில் சாதனை படைத்த வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி பரந்தன் இந்து மகாவித்தியாலய மண்ட பத்தில் காலை 9.00 மணிக்கு கண்டாவளைப் பிரதேச விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சீ.[illegible]ங்டர்மான் தலைமையில் நடை பெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்[illegible]ன மேலதிக அரச அதிபர் திரு.ந.வேதநாயகன், கண்டாவளை பிரதேச செயலர். சீ.சிவ சொரூபநாதபிள்ளை ஆகியோர் ஏற்றி[illegible]ர்.

தொடர்ந்து மாவட்ட மட்டத்[illegible]ல் தத்தி மிதித்துப் பாய்தலில் செல்வி.சீ. சாந்த ரூபி,குண்டெறிதலில் கு.துஷ்யந்தினி, தட்டெறிதலிலும் கு.துஷ்யந்தினி, ஆயிரம் மீற்றர் மரதன் ஓட்டத்தில் வி.டிவனியாநிலூசினி ஆகியோர்முதலாம் இடம் பெற்றமைக்காகவும், மாகாண மட்டத்தில் மரதன்ஓட்டத்தில் முதலாம் இடம் பெற்றமைக்காகவும் இவர்களுக்கு தங்கப்பதக்கம் உட்பட பல பரிசில்களும் வழங்கப்பட்டன.தங்கப்பதக்கத்தை கிளி/மாவட்ட மேலதிக அரச அதிபர் ந.வேதநாயகன்,கண்டாவளைப் பிரதேச செயலர் சீ.சிவசொரூபநாதபிள்ளை ஆகியோர் சாதனை படைத்த வீரர்களுக்கு வழங்கிக் கௌரவித்தனர். (14)

## ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு

(கண்டாவளை)

விசுவமடுவில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழா கடந்த புதனன்று மு.ப.10.00 மணியளவில் விசுவமடு விவசாயிகள் ப.நோ.கூ.சங்கத் தலைவர் வ. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்சுடரை கிளி. மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனத் தலைவி திருமதி. தேவாம்பிகை காசிநாதன், விசுவமடு விவசாயிகள் ப.நோ.கூ.ச. பொது முகாமையாளர் மு.சதானந்தன் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியை கிராமப் பொறுப்பாளர் புவியழகன் ஏற்றினார்.

தொடர்ந்து ஆரம்ப சுகாதார நிலையப் பெயர்ப்பலகையைப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் து.வி. ஜெயக்குலராசா திரை நீக்கம் செய்து வைத்தார். புதிய மண்டபத்தை யுனிசெவ் வெளிக் கள உத்தியோகத்தர் ஸ்ரீறோக்கோ நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் தயானந்தா, பிரதி மாகாண சேவைகள் சுகாதாரப் பணிப்பாளர், யுனிசெவ் வெளிக்கள உத்தியோகஸ்தர் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். இறுதியாக இளங் கோபுரம் சோழர் சிறுவர் இல்ல மாணவர்கள், விசுவமடு ம.வி. மாணவர் களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (14)

# எழுச்சி நிகழ்வுகளில் மாணவர் பங்கேற்பை தடுக்கும் இராணுவத்தின் முயற்சிக்கு கண்டனம்

## -மாணவர் சமூகம், பொது அமைப்புக்கள் அறிக்கை

யாழ். குடாநாட்டில் இடம்பெறும் எழுச்சி நிகழ்வுகளில் மாணவர்களைப் பங்கு கொள்ள விடாது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் குறித்து யாழ். குடாநாட்டு கல்விச் சமூகத்தை சேர்ந்தவர்களால் கடும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். குடாநாட்டில் இடம்பெறும் தமிழீழ தேசிய எழுச்சி நிகழ்வுகளில் யாழ். குடாநாட்டு மாணவர் சமூகத்தினர் பெருமளவில் கலந்துகொண்டு தமது அபிலாசைகளையும் இன ஒற்றுமையையும் வெளிப்படுத்தி வருகின்றதுடன், தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வுரிமையை சர்வதேச அரங்கில் பறைசாற்றியும் வருகின்றனர்.

இவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிறிலங்கா இராணுவத்தினர் எழுச்சி நிகழ்வுகளில் மாணவர்களைக் கலந்து கொள்ள விடாது தடுப்பதற்கு முயற்சிப்பது குறித்து கடும் கண்டனம் தெரிவித்துள்ள யாழ். மாவட்ட மாணவர் சமூகம் மற்றும் பொது அமைப்புக்கள் இவை கைவிடப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளன.

அத்துடன் படையினரது இத்தகைய முயற்சிகள் குறித்து கண்டனம் தெரிவிக்கும் விதத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, தமிழ் மாணவர் ஒன்றியம், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் எனபன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

யாழ்.மாவட்ட சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில், யாழ்.குடாநாட்டிலுள்ள மாணவர்கள் இன்றுவரை எத்தனையோ மனித அவலங்களைச் சந்தித்து வருகின்றனர். இன்று கூட மாணவர்களில் பெருந்தொகையானோரின் வீடுகளில் இராணுவ ஆக்கிரமிப்பு முகாம்கள்; எத்தனையோ பாடசாலைகள் மாணவர்கள் நெருங்கமுடியாத மரணப் பொறி வெடிகள் மத்தியில் உயர் பாதுகாப்பு வலயங்கள் இவற்றை எல்லாம் இதே இராணுவத் தளபதியே ஆக்கிரமிப்புச் செய்துள்ளார். நாம் பல தடவைகள் மாணவர்களின் இந்த அவலநிலைகள் பற்றி கூறிய போதெல்லாம் அவற்றை இந்த இராணுவத் தளபதி கருத்தில் எடுக்கவில்லை. இன்று மாணவர்களின் திட்டமிட்ட வகையில் இராணுவப் புலனாய்வுத் துறையினரால் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற கலாசார சீரழிவுகளுக்கான கட்டளை அதிகாரியும் இவரே.

இது மட்டுமல்ல 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எம் மண்ணில் புதைக்கப்பட்ட மாணவி கிருசாந்தி, கொக்குவிலில் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவன் சஞ்சீவன் போன்ற எம் உறவுகளின் உயிர்க் கொலைக்கெல்லாம் கட்டளை பிறப்பித்தவர்களும் இந்த மாவட்டத்தின் இராணுவத் தளபதிகளே. இவர்களால் அன்று எமது காவல் தெய்வங்களான தமிழீழ விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளில் மாணவர்கள் பங்குபற்றுவது தொடர்பாக எவ்வாறு தங்களிடம் முறைப்பாடு செய்ய முடியும் இவர்கள் குறிப்பிடுகின்ற இந்த நிகழ்வுகள் இவர்கள் கூறுவது போன்று விடுதலைப் புலிகளுடைய நிகழ்வுகளல்ல. நாம் ஒரு விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கும் இனம். நாம் எமது விடுதலை கிட்டும் வரை இந்த விடுதலைக்காக போராடி துயிலுமில்லங்களில் உறங்கும் புனிதர்களை காலத்திற்குக் காலம் நினைவு கூருவதை இந்தக் காடையர்களால் தடுக்க முடியாது.

அதுமட்டுமல்ல மாணவர்களாகிய நாம் இந்த ஆக்கிரமிப்புப்படைக்கெதிராக அடிக்கடி பெரும் போராட்டங்களை நடாத்த வேண்டிய நிர்ப்பந்தத்தையும் இந்த இராணுவமே எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

எனவே நாம் அவ்வப்போது எமது விடுதலைக்கு வலுச் சேர்க்கக் கூடிய சில நிகழ்வுகளை செய்து வருகின்றோமே தவிர இங்கு தமிழீழ விடுதலைப்புலிகளால் எந்த நிகழ்வுகளும் நடத்தப்படவில்லை. புலிகள் வேறு மக்கள் வேறு என்ற கருத்து பல ஆண்டுகளுக்கு முன்னரே இல்லாது போய் விட்டது. ஆனால் இராணுவம் இன்னும் இக்கருத்தை வெளிப்படுத்த முன்னிற்கின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மாணவர்கள் ஒருபோதும் எமது இனத்திற்கான விடுதலைப் போரட்டத்திற்கு வலுச்சேர்க்கின்ற செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கிக்கொள்ள மாட்டார்களென்பதையும் தெரியப்படுத்துகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட கண்டன அறிக்கையில் 22.07.2004 வெளியான பத்திரிகையில் விடுதலைப்புலிகளின் நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றக்கூடாது என்ற அறிக்கை தொடர்பாக உயர்கல்வி நிறுவனங்கள் என்ற வகையில் இராணுவ தளபதியின் அறிக்கையினை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இன்று குடாநாட்டில் பல பாடசாலைகள் இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது. பல மாணவர்கள் தங்கள் இருப்பிட வசதிகளையிழந்து அகதி முகாம்களில் பல இன்னல்களின் மத்தியிலேயே கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றார்கள். குடாநாட்டில் உள்ள மாணவர்கள் தங்களது சுதந்திரமான கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு இராணுவமே தடையாகவுள்ளது. குறிப்பாக தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி, யூனியன் கல்லூரி மாணவர்கள் பல இன்னல்களின் மத்தியில் தான் தங்களது கற்றல் செயற்பாட்டினை மேற்கொள்கின்றனர். இன்று மாணவர்கள் மத்தியில் திட்டமிட்ட வகையில் கலாசார சீரழிவுகளை இராணுவம் மேற்கொண்டு வருகின்றது. என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், விடுதலைப் போராட்டம் தனியே விடுதலைப்புலிகளுக்கான போராட்டம் அல்ல. அது ஒட்டுமொத்த தமிழ் மக்களுடனான விடுதலைப்போராட்டம் இதனை முதலில் இராணுவத்தளபதி உணர்ந்து கொள்ள வேண்டும். விடுதலைப்புலிகள் நிகழ்வு என்று இதுவரையில் யாழ்.குடாநாட்டில் எந்த விதமான நிகழ்வுகளும் இடம் பெறவில்லை. மாறாக யாழ்.குடாநாட்டில் இடம் பெறும் நிகழ்வுகள் அனைத்துமே தமிழ் மக்களுடைய நிகழ்வுகள்.

அதாவது தமிழ் மக்களின் தேசியத்திற்கும் எழுச்சிக்கும் வலுச்சேர்க்கின்ற நிகழ்வுகள். ஆரம்பகாலத்தில் எமது மாணவர்களின் கல்வி மறுக்கப்பட்டு, எமது மக்களுடைய நிம்மதியான வாழ்வு நசுக்கப்பட்ட போது மாணவ சக்தியாலேயே எமது விடுதலைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது யாழ்.மாவட்ட இராணுவ தளபதிக்கு தெரியாமல் இருக்கலாம். எமது இனத்திற்கான விடுதலை என்பது தனியே விடுதலைப்புலிகளுக்கான விடுதலையோ அல்லது மாணவ சமூகத்திற்கான விடுதலையோ அல்ல. அது ஒட்டுமொத்தமான தமிழினத்திற்கான விடுதலையாகும். அந்த விடுதலையை வென்றெடுக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு.

யாழ்.குடாநாட்டில் எப்பொழுது இராணுவ ஆக்கிரமிப்பு ஆரம்பித்ததோ அன்றிலிருந்து இன்று வரைக்கும் எமது இனத்தினுடைய கலாசாரத்தையும் பண்பாட்டையும் சீரழிக்கக் கூடிய செயற்பாடுகளிலே இராணுவம் ஈடுபட்டு வருகின்றது.

யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி எமது மாணவர்களின் உரிமைகளில் கைவைப்பதை நாம் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

1995 ஆம் ஆண்டு இராணுவம் மீண்டும் யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்த போது, இருந்த எமது மக்களின் மனநிலை இன்று எமது மக்களிற்கு இல்லை. இதனை இராணுவத்தளபதி விளங்கிக் கொள்ள வேண்டும் எனவே யாழ் குடாநாட்டில் இடம் பெறும் நிகழ்வுகளில் மாணவர்களை பங்குபற்ற விடாது தடுப்பதன் மூலம் எமது இனத்தினுடைய தேசியத்தையும், எமது மக்களின் எழுச்சியையும் சிதைக்க முற்படும் இராணுவத்தளபதியின் செயற்பாடு நிச்சயமாக வெற்றியளிக்கப்போவதில்லை. எமது தேசியத்தைச் சீரழிக்கக் கூடிய எந்த விதமான நடவடிக்கைகளையும் எதிர்கொள்ளக்கூடிய நிலையிலேயே இன்று எமது மக்கள் உள்ளனர் என்பதை இராணுவத் தளபதிக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றோம். ஆகவே யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் தொடர்பாக எமது நிஜாயப்பாட்டையும் அதிருப்தியையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (33,36)

# தேசிய எழுச்சிப் பேராளர்களின் குடும்பங்களுக்கு சிறிலங்காப் புலனாய்வுத் துறையினர் அச்சுறுத்தல்

(தென்மராட்சி)

தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேராளர்களின் இல்லங்களை குறி வைத்து சிறிலங்காப் புலனாய்வுத் துறையினர் உளவியல் ரீதியில்அச்சுறுத்தல் விடுத்து வருவதாக தெரியவருகிறது.

சரசாலை மட்டுவில்,சாவகச்சேரி, கோயில் குடியிருப்புப் பகுதிகளை சேர்ந்த தேசிய எழுச்சி முக்கிய பொறுப்புக்களிலுள்ள பேராளர்களின் குடும்பங்களே அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளனர்.

வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து குடும்ப உறுப்பினர் விபரம் செய்யும், தொழில் இயக்கம் சார்ந் செயற்பாடுகள் என கேள்விகள் கேட்பதாகவும் இயக்க செற்பாடுகளிலிருந்து; விலகியிருக்க பேராளர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் தெரியவருகிறது. யுத்தநிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதற்குப் பின்னால் குடாநாட்டில் இதுபோன்று மக்களைப் பொது அமைப்புக்களை குழப்பி உளவியல் ரீதியான அச்சத்தை படைத்தரப்பு தொடர்ந்து ஏற்படுத்துவதாகத் தெரியவருகிறது. (28)

# பாடசாலைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஆராய்வு

(வடமராட்சி)

வடக்குக்கிழக்கு பகுதியில் பாடசாலைகளது அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக ஆராய எதிர்வரும் 29ஆம்திகதி திருகோணமலையில் உள்ள கல்வி அமைச்சில் கூட்டம் இடம் பெறவுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலுள்ள பாடசாலை வேலைகள் பொறியியலாளர்கள், வேலைகள், பரிசோதகர்கள் மற்றும் கணக்காளர்கள் இச்சந்திப்பிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றைச் சீர் செய்வது இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளது. (27)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் குடி நீர், சுகாதாரம் பேணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் குடிநீர் சுகாதாரம் உரிய முறையில் பேணப்படாமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடிநீர்க் கிணறு, மற்றும் தாங்கி என்பவற்றின் சுத்தம் உரிய முறையில் பேணப்படுவதற்கு யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் போதனா வைத்தியசாலை குடிநீரை பாவனை செய்வோர் நோய்த் தாக்கங்களுக்கு இலக்காகி வருகின்றனர். எனவே நோயாளர்களின் தேவைகளுக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் விநியோகம் செய்யப்படும் குடிநீரின் சுத்தத்தைப் பேண நடவடிக்கை எடுக்கக் கோரியே இம்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (33)

## வெளியீட்டு விழா

யாழ்.இலக்கிய வட்டத்தினால் தேவன்-யாழ்ப்பாணம் சிறுகதைகள் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. கலாநிதி குணராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

# பரு.துறைமுகத்தில் புதிய தொழிலாளரை அனுமதிக்க படையினர் மறுப்பு

## -பொதி இறக்கும் பணி தாமதம்

(வடமராச்சி)

பருத்தித்துறை இறங்கு துறையில் பொதி இறக்கும் பணியில் புதிய தொழிலாளர்களை ஈடுபடுத்த படைத்தரப்பு அனுமதி மறுத்து வருவதால் பொதிகளை இறக்கும் பணியில் தாமத நிலை தோன்றியுள்ளது.

பருத்தித்துறை அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இவ் இறங்கு துறையினூடாக தற்போது கப்பல்களில் தனியாருக்கான சிமெந்து எடுத்து வரப்படுகின்றது. இந் நிலையில் இவ் இறங்கு துறையில் பொதிகளை இறக்கும் பணியில் மீனவ சங்கங்களினூடாக தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இத் தொழிலாளர்கள் அனைவருக்கும் "பாஸ்" அனுமதியினை வழங்கியுள்ள படைத்தரப்பு, பருத்தித்துறை முதலாம் குறுக்கு வீதியிலுள்ள இராணுவ தடைமுகாமினூடாக சோதனைகளின் பின்னர் தொழிலாளர்களை இறங்கு துறையினுள் அனுமதித்து வருகின்றது.

எனினும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான காலப்பகுதியில் புதிய தொழிலாளர்கள் எவரினையும் இறங்கு துறையினுள் செல்ல படைத்தரப்பு அனுமதி மறுத்து வருகின்றது. புதிய தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்தவென சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையினையும் படைத்தரப்பு நிராகரித்துள்ளது. இதேவேளை புதிய தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தும் விடயத்தில் யாழ். செயலகமும், துறைமுக அதிகார சபையும் கூட அக்கறை யற்றிருப்பதாக மீனவ சங்கங்கள் குற்றஞ் சாட்டுகின்றன. (27)

# சட்ட விரோத மண் கடத்தல் செயற்பாடுகளை நிறுத்துக!

## - கொடிகாமம் பிரதேச பொறுப்பாளர் வலியுறுத்து

(தென்மராச்சி)

தென்மராச்சி பகுதிகளில் இருந்து தினந்தோறும் குடாநாட்டுக்கும், ஏனைய பகுதிகளுக்கும் , சட்டவிரோத மண்கடத்தம் நபர்கள் உடனடியாக தங்கள் நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என கொடிகாமம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார்.

தொடர்ந்தும் இது போன்ற செயலில் ஈடுபடும் தனிநபர்களுக்கு எதிராக இனிவரும் காலங்களில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சமீப காலங்களாக எச்சரிக்கையும் மீறி அதிக இலாபம் பெற வேண்டும் என்பதற்காக இத் தொழிலில் தொடர்ந்தும் பலர் ஈடுபட்டுள்ளதாகவும், இதனால் மண்ணின் வளம் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (28)

## முதலிடம்

யாழ். மாவட்ட மனித முன்னேற்ற நடு நிலையத்தால் கியூடெக் சார்பில் இடம் பெற்ற சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாய் மாவட்ட அளவில் நடைபெற்ற நாடகப் போட்டியில் கச்சாய் புனித இராயப்பர் ஆலயப் பங்கைச் சார்ந்த இளைஞர்கள் முதல் இடத்தைப் பெற்றுள்ளனர். இப்போட்டியில் பதினைந்து நாடகங்கள் இடம்பெற்றன. யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் கச்சாயைச் சேர்ந்த பள்ளி மாணவி தயா என்பவர் எழுதிய 'சிறுவர் துஷ்பிரயோகம்' சம்பந்தமான நாடகத்திற்கு முதலிடம் கிடைத்துள்ளது.(28)

# டைனோசர்கள் வால் வெள்ளியால் அழிவுற்றனவா?



மேரிலாந்திலுள்ள "எக்கோ ஆர்க்" என்ற ஆய்வு நிறுவனத்தின் புவியியல் சுற்றாடல் விஞ்ஞானியான கெவின் போப் என்பவர் புவியில் டைனோசர்களின் அழிவு பற்றி ஆய்வு ஒன்றை மேற்கொண்டு பல அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

உலகத்தில் அனைத்துப் பாகங்களிலும் இது பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் நிலையான முடிவொன்றை எட்டமுடியவில்லை. இந்நிலையில் மேற்படி விஞ்ஞானியின் தகவல்களின் படி இற்றைக்கு 60 மில்லியன் வருடங்களுக்கு முன்பு பூமிக்கு இறங்கி வந்த வால்வெள்ளி ஒன்றின் காரணமாகவே டைனோசர்கள் அழிந்து போனதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடஅமெரிக்காவிலுள்ள அரிசோனா மாநிலத்தில் "நைஸ்" என்னும் படிவுப்பிரதேசமும், டொன்டோவில் 'பேலியோ சொய்க்' என்ற கல்மண் கலந்த பிரதேசமும் காணப்படுகின்றது. இப்பகுதியில் ஆய்வு நடத்தியதில் புராதன மிருகங்களினதும் மரங்களினதும் படிவுகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இப்படிவுகளில் அதிகமாக இரிடியம் என்ற மூலப்பொருள் காணப்பட்டுள்ளது,. "உல்கா" உல்காஷ்" எனப்படும் வால் வெள்ளிகள் புவியில் இறங்கியதால் சல்பேட் வாயு வளிமண்டலத்துடன் கலந்துள்ளதாகவும் இதன் காரணமாக சல்பூரிக் அமிலத்துடன் கூடிய மேகம் உருவாகியதாகவும் மேற்படி விஞ்ஞானி தெரிவிக்கிறார்.

இவ்வாறு அமிலங்கள் கூடிய மேகத்தினால் பொழியும் மழையினால் பிராணிகள் தாக்கம் அடைந்து மரணத்திற்குள்ளாகியதாக அவர் தெரிவிக்கின்றார்.

உண்மையில் புவியில் வாழும் உயிரினங்களை அச்சுறுத்தும் வால் வெள்ளிகள் காணப்படுகின்றதா? பிராக் என்னும் டைனோசர் உயிரினம் பலியாக வால்வெள்ளி தான் காரணம் என்பது உண்மையா? என்று தற்போது விவாதங்கள் நடைபெறுகின்றன.

# அதிசயப்பிறப்பு

ஆஸ்திரேலிய குயின்லாந்துப் பகுதிப் பெண்மணிக்கு 6வாரங்களுக்கு முன்பு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் இருதயம் மார்புக்கு வெளியே இருந்தது. மேலும் சிறுநீரகக் கோளாறு, மார்பில் நோய்ப் பாதிப்பு போன்ற குறைகளும் இருந்தன. இப்போது குழந்தை சுயமாக சுவாசிக்கிறது. தாய்பாலும் அருந்துகிறது. உடல் எடையும் விரைந்து அதிகரித்து வருகிறது.

விரைவில் 2 அறுவை சிகிச்சைகள் மூலம் இருதயத்தைச் சரியான இடத்தில் பொருத்துவது உட்படப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் சகஜ நிலைக்கு குழந்தை திரும்பும் என்றும் கூறப்பட்டுள்ளது. இப்போது குழந்தை நலமுடன் இருப்பது 20 இலட்சம் பிறவிகளில் ஒருவருக்கே சாத்தியம் ஆகும் என்று கூறப்படுகிறது.

# தெரிந்து கொள்வோம்

*இரும்பையும் தங்கமாக மாற்ற முடியும். எப்படித் தெரியுமா? இரும்பு அணுவுக்குள் இருக்கும் புரோட்டன். நியூட்டன் எண்ணிக்கைகளை மாற்றியமைப்பதன் மூலம் தங்கமாக மாற்றிவிடலாம். இதனைக் கண்டுபிடித்தவர்கள் ரஷ்ய விஞ்ஞானிகள்.

*வைரக்கல் பற்றி தெரிந்து கொள்வோமா?


இது வெறும் கிறிஸ்டலைஸில் ஆன ஒரு கரிதான். ஆனால், இதனது விலையோ 30 கோடி ரூபா. கி.மு.200ஆம் நூற்றாண்டிற்கு முன் இந்தியர்களே முதன் முதலில் வைரக்கற்களைத் தோண்டி எடுத்துள்ளார்கள்.

# கண்டங்கள் நகர்கின்றன

ஆண்டொன்றுக்கு 2முதல் 5 சதம மீற்றர் வரை கண்டங்கள் நகர்வதாக நிபுணர்கள் கணித்துள்ளனர். ஒருவரின் ஆயுட்காலத்திலே ஐரோப்பாவிலிருந்து வடஅமெரிக்கா ஏறக்குறைய இரண்டு மீற்றர் அளவு தூரத்துக்கு நகர்ந்து சென்றுவிடும். தென்னமெரிக்காவில் கீழக்கரையோரத்தை ஆபிரிக்காவின் மேற்கு கரையோரத்துடனும், ஐரோப்பாவின் மேற்கு கரையோரத்தை வட அமெரிக்காவின் கீழ்கரையோரத்துடனும், இணைக்க முடிவ்து போலக் காணப்படுகிறதல்லவா? உலகப்படத்தை அவதானிக்கும் போது இவை தென்படும்.

200 மில்லியன் வருடங்களுக்கு முன் அனைத்துக் கண்டங்களும் இணைந்து பெரியதொரு நிலத்திணிவாக இருந்தற்கான ஆதாரங்களையும் கண்டறிந்துள்ளனர். கண்ட நகர்வு சம்பந்தமாக 'தகடோட்டக் கொள்கை' (place tectonic theory) முன்வைக்கப்பட்டுள்ளது. புவியின் மேலோட்டிலே (Crust) கண்டங்களும், சமுத்திரங்களும் அமைந்துள்ளன. மேலோட்டடுக்கு கீழே மூடுபாறை (Mantle)பகுதி உள்ளது. அதன் கீழே புற,அக உள்ளீடுகள் (Outer coreinnercore) அமைந்துள்ளன. புவியின் உள்ளே செல்லச்செல்ல பாறைப் பொருட்களின் அடர்தி அதிகரித்துச் செல்கிறது. இதனால்புவிமேலோட்டுப்பகுதி அதன் அடுத்த பகுதியாகிய அடர்த்தி கூடிய மூடுபாறைப் படையின்மேல் மிதக்கிறது.

# மரணத்தை ஏற்படுத்தும் ஜெல்லி மீன்கள்!



அண்மையில் மேற்கு அவுஸ்திரேலியாவின் ப்ரூமி கடலோரப் பகுதியில் இந்த அரியவகை 'ஜெல்லி' மீன் கண்டுபிடிக்கப்பட்டது. உலகின் மிகக் கொடிய விஷ மீன்களில் இதுவும் ஒன்று. இந்த இருகன்ட்றி மீனை ஜேம்ஸகுக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள கண்டுபிடித்துள்ளனர். இந்த மீனின் கொடுக்குவால சுமார் 30 சென்ரிமீற்றர் நீளமுடையது!. அதால் தாக்கினால் தாங்க முடியாத உடல் வலியுடன் உடனடியாக மரணம் ஏற்படும். அவுஸ்திரேலியாவில் இம் மீன்கள் அதிகம் உள்ளன. ஆபத்தான இம்மீன்களால் அதிகமானோர் உயிரிழந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இம்மீனின் நச்சுத்தன்மையிலும் ஆண்மைக்குறைபாடு உடையவர்களைக் குணப்படுத்தும் மருத்துவத்தன்மை உள்ளதாக அவுஸ்திரேலிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# இரத்தத்தை உறிஞ்சும் வௌவால்கள்

தென்அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, மெக்சிக்கோ போன்ற இடங்களில் காணப்படும் வம்பயர் வௌவால்கள் உலகமே உறங்குகின்ற போது இருண்டகுகைகள், மரப்பொந்துகள், கைவிடப்பட்ட கட்டடங்களிலிருந்து வெளியேறும். அப்பொழுதே அவை தமது உணவைத்தேடும். புராணக்கதைகளின் படி இவ் வௌவால்களின் தோற்றத்தின் படியே 'வம்பயர்' (இரத்தக் காட்டேறி) எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது.

இவ்வௌவால்கள் மாடு,பன்றி, குதிரை போன்ற மற்றைய விலங்குகளின் குருதியையே உணவாக உறிஞ்சுகின்றன. மனிதர்களையும் கூட குருதியை உள்ளெடுப்பதற்காகக் கடிக்கின்றன. இவ் வௌவால்கள் குருதியை உறிஞ்ச முடியாவிட்டால் பற்களால் வெட்டி அவற்றின் நாக்கினூடாக நக்குகின்றன. இவ் வௌவால்கள் கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் அம்மிருகத்தை நித்திரையை விட்டு எழுப்பாமல் இரத்தத்தைக் குடிக்கும் ஆற்றலுள்ளவை.

இவ்வின வௌவால்கள் மற்றைய வௌவால் இனங்களை விட வித்தியாசமானவை. இவை நடத்தல், ஓடுதல், பாய்தல் போன்ற இயல்புகளைக் கொண்டவை. விசேடமாக மிகவும் பலமான கால்களைக் கொண்டவை. அத்துடன் விசேட வகையாக அதாவது அவற்றின் உணவூட்டலுக்கு உதவுகின்ற பெருவிரலைக் கொண்டவை. இரத்தத்தை உறிஞ்சக் கூடிய பாகத்தை அறியக் கூடிய வெப்ப உணரி ஒன்றினை மூக்கில் கொண்டுள்ளவை. இவ் வௌவால்கள் தமது இரவு உணவைப் பெறாவிட்டால், இரு நாட்கள் தொடர்ந்து இரவு குருதி உறிஞ்சாவிட்டால் அவை இறந்து விடுகின்றன. மேற்படி வௌவால்கள் கடிப்பதனால் விசர் (தண்ணீர் வெறுப்பு நோய்) பரவுகின்றது. இவை மக்களுடன் சினேகித பூர்வமாகப் பழகக் கூடியவை என ஒரு ஆய்வாளர் கூறியுள்ளார். அவர் கூறுகையில் தான் வைத்திருக்கும் இந்த வௌவால் இனங்கள் தான் அவற்றின் பெயரை அழைக்கும் போது அவை தன்னிடம் வருவதாகக் குறிப்பிடுகிறார்.

# செவ்வாயில் தங்கி ஆராய முடிவு

2010ஆம் ஆண்டு செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் சென்று அங்கு ஆய்வு செய்வதற்கு தீர்மானித்திருக்கின்றனர். ஆறு மனிதர்களை செவ்வாய்க்கிரகத்திற்கு அனுப்பி 500 நாட்களில் திரும்பி வருவதற்கு ஆய்வினை மேற்கொண்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு இத்திட்டம் பூர்த்தியாகும் என அமெரிக்க மாட்டின் மெரியட்ட ஆகாயவெளி தொழில் நுட்பவியலாளர் ரொபட் புஸ்ரின் தெரிவித்துள்ளார். இதைச் செய்து முடிப்பதற்கு 400கோடி அமெரிக்க டொலர் செலவாகும் என மார்ட்டின் மெரியட்டி தொழில்நுட்ப நிறுவனம் அறிவித்துள்ளது.


# ஐஸ்கட்டி தீப்பற்றுமா? ஜப்பானியரின் கண்டுபிடிப்பு




தீயையும் பஞ்சையும் ஒன்று சேர்த்தால் விரைவில் தீப் பற்றும் என நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் ஐஸ கட்டியும் தீயும் சேர்ந்தால் என்ன நடக்கும்?

மேலோட்டமாகப் பார்க்கும் போது இங்கு காணப்படுவது ஐஸ் கட்டிபோல் காணப்பட்டாலும் இவை எரியக் கூடியவை ஆகும். இவை ஜப்பானிலுள்ள பிரபல்யமான மெழுகுதிரி உற்பத்தி நிறுவனத்தினரின் தயாரிப்பாகும். இவை சிறு தகரப் பேணிகளில் அடைக்கப்பட்டுள்ளன. இப்பேணியைத் திறப்பதாயின் அதற்குரிய வெட்டும்கருவி (Tincu tter)யின் உதவியுடன் திறக்க வேண்டும். இவற்றில் 4 ஐஸ்கட்டிகள் போன்ற பொருட்கள் காணப்படுகின்றன. இவற்றை பாவிக்கும் போது ஒரு கட்டியை எடுத்து நீர் நிறைந்த கண்ணாடிக் குவளையில் இட்டுக் கொளுத்த வேண்டும் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை இவை பிரகாசமாக ஒளிரும்.

# மூளையை அழிக்கும் அல்சீமர் தடுக்க மருத்துவர்கள் முயற்சி





மூளை செல்களை கொஞ்சம் கொஞ்சமாக கொன்று மூளையை அழிக்கும் அல்சீமர் நோய், மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு வருக்கும் அவசியம் வந்தே தீரும். வயது ஏற ஏற இந்த நோயின் தாக்கமும் அதிகரித்துக் கொண்டே செல்லும். மூளை செல்கள் இவ்வாறு உயிரிழப்பதை வேண்டுமானால தள்ளிப் போட முடியும். ஆனால் அழிவை அறவே தடுக்க முடியாது என்று மருத்துவ உலகம் கருதுகிறது.

இந்நிலையில் மூளையை அழிக்கும் இந்த நோயை நிறுத்துவதற்கும், அல்லது தடுப்பதற்கும் உருவாக்கப்பட்டுள்ள 2 மருந்துகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு பல்ன் தருவது தெரியவந்துள்ளது. இன்னும் சோதனை முறையில் உள்ள இந்த 2 மருந்துகளுமே பீட்டா அமிலாய்டு என்ற குறிப்பிட்ட புரொட்டீனை குறிவைத்துச் செயல்படுகிறது. ஏனெனில் இந்த குறிப்பிட்ட புரொட்டீன் தான் அல்சீமர் நோய்க்கு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. மூளை செல்களை அழிக்கும் இந்தப் புரொட்டீன் சின்னச் சின்ன கட்டிகள் போல செல்களுக்கு இடையே உருவாகி அதன் மூலம் அருகில் உள்ள செல்களை கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கும் வேலையைச் செய்கிறது. அமெரிக்காவில் 40 இலட்சத்து 50 ஆயிரம் பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பதாக ஒரு கணக்கு கூறுகிறது. அண்மையில் மறைந்த முன்னாள் அதிபர் ரொனால்டு ரீகன் கூட அல்சீமர் காரணமாக பாதிக்கப்பட்டுத் தான் மரணம் அடைந்தார் என்பது குறிப்பிடத் தக்கது

# பெற்றோர்களின் கவனத்திற்கு

நியூசிலாந்து பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் குழு ஒரு ஆய்வு நடத்தியது. 1000 சிறு குழந்தைகளை அவர்கள் 26 வயதை எட்டும் வரையில் பல்வேறு கட்டங்களில் இந்தக் குழு ஆராய்ந்தது. அதில் தெரியவந்த முடிவுகள் வருமாறு:- 5 வயது முதல் 15 வயது வரை உள்ளவர்கள் தினமும் 2 மணி நேரத்துக்கு மேல் தொடர்ந்து டி.வி. பார்த்தால் அவர்கள் வாலிப வயதில் சில பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள். 17 சதவீதம் பேர் உடல் பருமனாகி அவதிப்படுகிறார்கள். 15 சதவீதம் பேர் உடல் ஆரோக்கியம் மோசமான நிலையை அடைகிறது. 15 சதவீதம் பேருக்கு கொழுப்புச்சத்து அதிகரிக்கிறது. 17 சதவீதம் பேர் புகைப்பிடிப்பவர்களாக மாறுகிறார்கள். இவ்வாறு இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

# சிங்கள யுத்த வெறியர்களுக்கு கட்டுநாயக்கவில் வீழ்ந்த அடி!

இலங்கையின் அரசியல் வரலாற்றில் யூலை மாதம் பல அதிர்ச்சிகளுக்கும், ஆச்சரியங்களும், திருப்பங்களும், மாற்றங்களும் ஏன் கவலைகளும் நிரம்பப்பெற்ற மாதமுமாகும். இவை குறித்து பெரியதொரு பட் டியலே இடமுடியும். எனினும், 2001ஆம் ஆண்டு யூலை 24 ஆம் திகதி சிறிலங்கா



விமானப் படையின் முக்கிய படைத்தளமும், கட்டுநாயக்க சர்வதேசவிமானத்தளமும் தாக்குதலுக்குள்ளானமை அளித்த அதிர்ச்சியும், ஆச்சரியமும் அது ஏற்படுத்திய திருப்பங்களும், மாற்றங்களும் சிறிலங்காவின் அண்மைய அரசியல் - இராணுவ வரலாற்றில் வேறு எந்தவித நிகழ்வுகளும் ஏற்படுத்தவில்லை என்றே கூறலாம்.

கிரிக்கெட் போட்டிகளின் நேர்முக வர்ணனையைக் கேட்டுப் பழகிப் போன இலங்கை மக்களுக்கு இக்கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தின் மீதான தாக்குதலை சில தனியார் வானொலிகள் நேர்முக வர்ணனையாகவே வழங்கிக் கொண்டிருந்தன. இந்த வகையில் பாரிய அளவிலானதும், தீவிரமானதுமாக இருந்த இத்தாக்குதல் சிறிலங்காவின் அரசியல் போக்கையே அன்றிலிருந்து தீர்மானித்த சக்தியாகியது எனின் மிகையாகாது.

'தீச்சுவாலை' இராணுவ நடவடிக்கைத் தோல்வியுடன் ஓய்ந்து போயிருந்த சிறிலங்கா இராணுவத்திற்கு, கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மற்றும் சர்வதேச விமானத்தளம் மீதான தாக்குதலுடன் போர் முனைப்பு என்பதொன்றைச் சிந்திக்க முடியாததொரு சூழ்நிலை உருவாகியது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற பின்னர் தனியாக வடக்கு-கிழக்கில் மட்டும் தான் மோதல்கள் இடம் பெற்றன என்பதல்ல. தென்னிலங்கையிலும் குண்டுவெடிப்புக்கள், தாக்குதல்கள் எனக் காலத்திற்குக் காலம் இடம்பெற்றுள்ளன. பொருளாதார இழப்பும், உயிரிழப்பும் ஏற்பட்ட வண்ணமே இருந்துள்ளன. ஆனால், கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீதான தாக்குதலானது சில உண்மைகளைச் சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கும், மக்களுக்கும் தெளிவாக வெளிப்படுத்தியது.

இதில் ஒன்று யுத்தமானது வடக்கு-கிழக்கிற்கு மட்டுமானதல்ல. இலங்கை பூராவிற்குமானது என்பது முக்கியமானதாகும். இரண்டாவது யுத்தமென்பது தனியாக இராணுவ ரீதியில் மட்டும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில்லை. பொருளாதார அரசியல் ரீதியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைத் தெளிவாகவே நிரூபிப்பதாக இருந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை முதன்மைப்படுத்திப் பெரும் படை எடுப்புக்களுடன் சந்திரிகாகுமாரதுங்கநடாத்திய யுத்தமானது ஜயசுக்குறு முறியடிப்பு ஆனையிறவுத் தோல்வி, தீச்சுவாலை முறியடிப்பு என்பவற்றால் பெரும் பின்னடைவைச் சந்தித்திருந்தது. ஆனால், யுத்தம் வடக்கிலேயே இடம்பெற்று வந்ததினால், யுத்தத்தின் சுமையும், துயரமும் சிங்கள மக்கள் அனுபவித்ததாக இல்லை. படையினரின் சடலங்கள் கிராமங்களுக்குச் சென்றபோதும் மக்கள் யுத்தத்தின் தாக் கத்தை உணரவில்லை.

**கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் மூன்றாண்டு பூர்த்தி**

ஆனால்,கட்டுநாயக்கா மீதான தாக்குதல் யுத்தத்தில் தீவிரத்தையும், அதனால் விளையக்கூடிய பாதிப்புக்களையும் சிங்களவர்களுக்கு வெளிப்படையாகவே உணரவைத்ததெனலாம். இலங்கையின் பொருளாதாரமென்பது பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியது.

ஏற்றுமதி - இறக்குமதியில் பெரும் வீழ்ச்சி கண்டதோடு, பங்குச் சந்தையும் பெரும் சரிவு கண்டது. வெளிநாட்டு மூலதன வருவாயும் பாதிப்பிற்குள்ளானது. உல்லாசப் பயணத்துறையும் வீழ்ச்சி கண்டது. ஏற்கனவே பெரும் சரிவிற்கு உள்ளாகியிருந்த பொருளாதாரவளர்ச்சியானது எதிர்க்கணியம் என்ற நிலையை எட்டியது. கொழும்புத்துறைமுகமும், கட்டுநாயக்க சர்வதேச விமானப் படைத்தளமும் அபாயம் மிக்கவை என்ற நிலை உருவாகி காப்புறுதிகள் அதிகரிக்கப்பட்டன.

சிறிலங்கா பொருளாதாரத்திற்கு அன்று வீழ்ந்த இப்பாரிய அடியில் இருந்து நாடு இன்று வரையில் மீண்டதா என்பது சந்தேகமே. இடையில் ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பொருளாதார மீட்பிற்கான சில முயற்சிகளை மேற்கொண்டதாயினும் அதில் முன்னேற்றம் காணப்பட முன்னர் அவ் அரசாங்கம் கலைக்கப்பட்டது.

இதேசமயம், இத்தாக்குதலானது சிறிலங்கா அரசியலில் ஏற்படுத்திய தாக்கமானது மிகவும் பாரதூரமானது மட்டுமல்ல, இன்று வரை நீடிப்பதாகவும் உள்ளது. அதாவது சிறிலங்கா அரசியல் ஓர் ஸ்திரமற்ற தன்மையை அடைவதற்குஇத்தாக்குதலே காரணம் எனின் தவறில்லை என்றே கூறலாம்.

அதாவது, அன்று ஆட்சியில் இருந்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொ.ஐ. முன்னணி அரசாங்கம் இத்தாக்குதலுக்கு முன்னதாக ஓரளவு அரசியல் ஸ்திரத்தன்மை கொண்டதாகவே இருந்தது. ஆனால், இத்தாக்குதலானது சனாதிபதி சந்திரிகா அரசின் ஸ்திரத்தன்மையைப் பெரிதும் நெருக்கடிக்குள் தள்ளியதெனலாம்.

இதன் பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குள் மூன்று பொதுத்தேர்தலை சந்திக்கும் அளவிற்கு சிறிலங்காவின் அரசியல் நிலைமை ஸ்திரமற்றிருந்தது. தற்பொழுது ஆட்சியில் உள்ள ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம்கூட ஒரு சிறுபான்மை அரசாங்கமாக உளளது. ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் இன்னமும் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலையே உள்ளது.

இதேசமயம், சர்வதேச மத்தியஸ்தத்துடன் விடுதலைப்புலிகளுடன் நிபந்தனை அற்ற பேச்சிற்கு சந்திரிகா அரசாங்கம் மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களை நடத்துவதற்கு ஒப்புக் கொண்டது.

இத்தகையதொரு நிலைக்கு சிறிலங்காவின் வான் படை சந்தித்த ஆயுத தளபாட ரீதியிலான இழப்பும் முக்கியமானதாகும். இத்தாக்குதலில் சிறிலங்காவின் படை பல உலங்குவானூர்திகளையும், தாக்குதல் விமானங்களையும் இழந்தது. சிறிலங்காவின் படையைப் போரிடும் நிலைக்குக் கொண்டு வருவதெனில் அதற்கெனப் புதிய கொள்வனவுகள் செய்ய வேண்டிய நிலை வான் படைக்கு ஏற்பட்டது.

இந்நிலையில், யுத்தத்தை நடத்துவதென்பது சிறிலங்கா அரசிற்குச் சாத்தியமற்றதாக்கியது. யுத்தத்தை முதன் நிலைப்படுத்தி தேர்தலில் வெற்றிபெறுவது சாத்தியமற்றதாகியது. இந்நிலையில் தேர்தலில் சமாதானத்தை முன்னிலைப்படுத்திய ஐ.தே. கட்சி ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது.

இதன் பின்னணியில் சமாதான உடன்பாடு உருவாக்கப்பட்டது. தற்பொழுது ஆட்சியில் உள்ள தரப்பினருக்கு சமாதானப் பேச்சுவார்த்தையில் நாட்டம் கொண்டதாக இல்லையாயினும், யுத்தத்தை அவர்கள் கையில் எடுக்க வெகுவாகச் சிந்திக்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

ஏனெனில், கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தின் மீதான தாக்குதல் சம்பவத்தினால் விளைந்த பாதிப்புக்களை சனாதிபதி சந்திரிகா மறந்து போவதற்கான வாய்ப்பில்லை. அவ்வாறு மறந்திருப்பாரேயானால், இது வரையில் அவர் மற்றுமொரு போருக்குச் சென்றிருக்க வாய்ப்புண்டு. இந்த வகையில் கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீதான தாக்குதல் சம்பவமானது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு சிறிலங்கா அரசைத் தள்ளியது மட்டுமல்ல, சமாதானத்தை இன்று வரை



அழைப்பு விடுக்கும் அளவிற்கு இத்தாக்குதல் சம்பவமானது அரசாங்கத்தை ஆட்டம் காணவைத்ததொன்றாக இருந்தது. மறுவளமாகக்கூறினால், இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு என வரிந்து கட்டிக் கொண்டிருந்த அரசாங்கம் நோர்வே நீடித்து வைத்திருப்பதற்கும் காரணமாகியுள்ளது எனக் கூறினும் அது மிகையாகாது.

— ஜெயராஜ்

## பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரை நேற்று

முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவுப் பேருரை நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ். பல்கலைக்கழக கலைத்துறை பீடாதிபதி தலைமையில் இடம்பெற்றது இந்நிகழ்வில் சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் அரசு கலந்து கொண்டு நினைவுப்பேருரையை நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் சண்முகதாஸ், உட்பட மற்றும் ஏனைய பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## யாழ்.விவசாயப் பயிற்சிக்கல்லூரியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குக

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலியில் உள்ள விவசாயப் பயிற்சிக் கல்லூரியை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரிகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டில் தற்பொழுது 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டு விவசாயிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு உரிய வசதி வாய்ப்புகள் யாழ்.திருநெல்வேலியில் உள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் காணப்படவில்லை.இதனால் யாழ். மாவட்ட விவசாயிகளின் தரமும், அவர்களின் துறைசார் மேம்பாடுகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு மேற்படி விவசாயப் பயிற்சி கல்லூரியை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(33)

# அரச ஊழியர்களுக்கு 70 வீத வேதன உயர்வு

# அரசாங்கத்தின் கூற்று வேடிக்கையானது

## -முன்னாள் பிரதிநிதியமைச்சர் கருத்து

(கொழும்பு)

**"தற்போதைய நிதியோட்டத்தின் மத்தியில் அரசாங்க ஊழியர்களுக்கு 70 வீத வேதன உயர்வு வழங்கப்போவதாக அரசாங்கம் கூறுவது வேடிக்கையான விடயம்" என்று சிறிலங்காவின் முன்னாள் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் தற்போதைய மொத்த செலாவாணி இருப்பு 170 பில்லியன் ரூபாய்களாகும்.

வடக்கு கிழக்கு உட்பட்ட வங்கிகள் மற்றும் நாணய மையங்களின் செலாவாணி இருப்பே இதுவாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்

பாராளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய அவர், இவ்வாறான நிதியோட்டத்தின் மத்தியில் அரசாங்க ஊழியர்களுக்கு 70 வீத வேதன உயர்வு வழங்கப்போவதாக அரசாங்கம் கூறுவது வேடிக்கையான விடயமாகும் எனத்தெரிவித்தார்.

இந்த வேதன உயர்வை வழங்க வேண்டுமானால் அரசாங்கத்திற்கு மேலதிகமாக 70 பில்லியன் ரூபாவை வருமானமாக தேட வேண்டியிருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். அரசாங்கம் நாட்டின் பணவீக்கத்தை கட்டுப்படுத்த எவ்வித முனைப்பையும் மேற்கொள்ளவில்லை. அரசாங்க வங்கிகளில் மேலதிக பற்றாக 10 பில்லியன் ரூபா தற்சமயம் காட்டப்படுகிறது. இந்த நிலையில் அரசாங்கம், வருமானத்துக்கும் செலவீனத்தக்கும் இடையிலான இடைவெளியை கட்டுப்படுத்தாமல் நாட்டின் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியாது எனவும் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார்.(32)





கனேடிய தமிழ் வானொலி கடந்த சனிக்கிழமை கனடாவில் முதியோர் ஒன்றுகூடல் ஒன்றை நடத்தியது. அந்நிகழ்வில் முதியோருக்கான விளையாட்டுப் போட்டிகள், வினோத உடைப்போட்டிகள் அவர்கள் விரும்பிய பாடலைப்பாடிக்காட்டுவது, ஆடல்கள் என்பன உட்பட பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இது தொடர்பான சில காட்சிகள் இவை. (படம்:-தகவல்:-எழில்)

# பெரும்பான்மையை நிரூபிக்கும் விடயம்

# அரசால் காலவரையறையின்றி ஒத்தி வைப்பு

## -ஐ.தே.க ஊடகப் பேச்சாளர் சாடல்

(கொழும்பு)

பாராளுமன்றம் கூடியதும் சபாநாயகரை நீக்க பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆயினும் பெரும்பான்மையை நிரூபிக்கும் விடயம் காலவரையறை இன்றி பிற் போடப்பட்டுவிட்டது என ஐ.தே.கட்சி ஊடகப் பேச்சாளர் ரவீந்திர ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி எதிர் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடை பெற்ற ஊடகத்துறையினரை சந்தித்த போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஜே.வி.பி.யினர் கூறுவது போல் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக மக்களும், எதிர்கட்சியும் தீர்மானிக்க வேண்டுமாயின் அரசாங்கம் ஒன்று ஏன் என்று கேள்வி எழுப்பியதுடன், ஜே.வி.பி. யினர் இரட்டை வேடம் போடுவதாகவும் அவர்களின் போக்கை மக்கள் புரிந்துவிட்டனர் எனவும் தெரிவித்தார். அங்கு கருத்துக் கூறிய ஐ.தே. முன்னணி எம்.பி.அகில விராஜ் காரியவாசம் இந்தியாவிலிருந்து எந்தப் பண்டங்களையும் அன்று இறக்குமதி செய்ய ஜே.வி.பி தடை விதித்தது என்றும் அப்பொருட்களையும் நுகர்வோரையும் அப்போது தண்டித்ததாகவும் ஆனால் இன்று இந்தியாவின் உதவி கேட்டு பிரதமருடன் ஜே.வி.பி உறுப்பினர் அனுரா திசாநாயக்க அங்கு சென்றிருக்கிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

# அரசஊழியருக்கான "அக்ரகாசா" காப்புறுதித்திட்டம் மீண்டும் அமுல்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான மருத்துவ தேவை கொடுப்பனவிற்கான "அக்ரகாசா" காப்புறுதித் திட்டம் மீண்டும் அமுல்படுத்தப் படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

முன்னர் நடைமுறையில் இருந்த இந்த அக்ரகாசா காப்புறுதித்திட்டம் கடந்த ஐக்கியதேசிய முன்னணி ஆட்சிக்காலத்தின் போது இடை நிறுத்தப்பட்டது. தற்போது மீண்டும் அக்ரகாசா காப்புறுதியை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான தீர்மானத்தை ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி எடுத்ததாகவும், தற்போது அமைச்சரவை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# மகாபொல கொடுப்பனவு இரண்டாயிரம் ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு)

மகாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவுக்கான தொகை இரண்டாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக வர்த்தகப் பாவனையாளர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

மகாபொல புலமைப் பரிசில் பெற்றவர்கள் தற்போது ஆயிரத்து இருநூற்றி ஐம்பது ரூபாவே பெற்றுவருகின்றனர். உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கான தொகையையும் இரண்டாயிரம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 'அமுல்' பால்மா தொழிற்சாலை சிறிலங்காவில் அமைக்க ஒப்பந்தம்

இந்திய அரசின் ஒத்துழைப்புடன் சிறிலங்காவில் பால்மா தொழிற்சாலை ஒன்றை நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் முன்னணி வகிக்கும் பால்மாத் தொழிற்சாலைகளில் ஒன்றான அமுல் பால்மா கம்பனி சிறிலங்காவில் இத்தொழிற்சாலையை நிறுவுவதற்கு வாக்குறுதி அளித்துள்ளதாக விவசாய கால்நடை அமைச்சர் அநுரா குமார திசாநாயக்க டெயிலி நியூசிற்கு கூறியுள்ளார். கடந்த 14 ஆம் திகதியன்று அமைச்சரின் உத்தியோக பூர்வ இந்திய விஜயத்தின் போது குஜராத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாக்குறுதி அளிக்கப்பட்டது. இது தொடர்பாக இரு நாடுகளிற்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்ற பின் இத் தொழிற்சாலை தொடர்பான உடன் படிக்கை கைச்சாத்திடப்படும் எனவும் அவர் கூறினார்.

# முரண்பட்ட கருத்துடையோரை ஒன்றிணைத்து சனாதிபதி சமாதான முன்னெடுப்பு முயற்சி

## -நிதியமைச்சர் சரத் அமுனுகம கூறுகிறார்

(கொழும்பு)

பல்வேறு கருத்துக்களைக் கொண்ட தரப்பினரை ஒன்றிணைத்து அதன் மூலம் சமாதான நடவடிக்கைகளை வெற்றியடையச் செய்வதற்கு சனாதிபதி முயற்சிக்கின்றரென நிதியமைச்சர் சரத் அமுனுகம சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் பொருளாதாரம் கொள்கையை அரசின்-அதிகாரிகளுக்கும் வெளிநாட்டு உதவி வழங்கும் குழுவினருக்கும் கடந்த புதனறு சமர்ப்பித்த வேளை அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் பாராளுமன்ற பெரும்பான்மையுடன் தோன்றும் சமாதான தீர்வின் ஊடாக வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசின் வரவு -செலவுத்திட்டத்தை ஹெல உறுமய உறுப்பினர் ஆதரிப்பர்

## -அமைச்சர் பெர்னான்டோ புள்ளே நம்பிக்கை

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய வரும் வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அரசிற்கு ஆதரவாக வாக்களிக்க உடன்பட்டுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

ஹெல உறுமயவின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியதை அடுத்து அவர்கள் அரசிற்கு ஒத்துழைப்பு வழங்க உடன்பட்டதாகவும், ஆளும் கட்சியின் பிரதான கொரடாவும், அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டின் தற்போதைய நிலையை கருத்திற் கொண்டு எதிர்வரும் வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது அரசிற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினரான அத்துரலியே இரத்ன தேரர் தெரிவித்துள்ளார் என்றார்.

இதேவேளை பிக்குமார் சிலர் இது தொடர்பாக தன்னுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியதாகவும், அரசின் சட்ட மூலப்பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது அவற்றிற்கு எதிராக வாக்களிக்கப் போவதில்லையென அவர்கள் உறுதியளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கடவுச்சீட்டு வழங்கலில் மோசடி

(கொழும்பு)

கடவுச்சீட்டு விநியோகத்தில் முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்டுகின்றது. பெருமளவு பணத்தை பெற்றுக்கொண்டு போலிக் கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்தாக சிறிலங்காவில் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் கூறியுள்ளனர்.

# கொழும்பு -கொச்சின் பயணிகள் கப்பல் சேவை

## -இரு நாடுகளும் இணக்கம்

(கொழும்பு)

கொழும்பிற்கும் இந்திய கேரள மாநிலத்தின் கொச்சினுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்துவதற்கான இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமர் இந்தியாவில் இருந்து திரும்பிய பின்னர் நேற்று முன் தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; இந்தத் திட்டத்திற்கு இரு நாடுகளும் உடன்பாடு கண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை முன்னைய அரசு கொழும்பிற்கும் தூத்துக் குடிக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்துவதற்கு முற்பட்ட போதும் தமிழ்நாடு அரசு அதற்கு இணங்க மறுத்தமையால் அத்திட்டம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற கார் வழங்கப்படும்

(கொழும்பு)

சிறிலங்காப் பாராளுமன்றத்திற்குப் புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற கார்கள் இறக்குமதி செய்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பாராளுமன்ற விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது. இதன்படி 80 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கார்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் அவ் அமைச்சு அறிவித்துள்ளது.

# அசாம் மாநிலத்தில் மோசமடையும் வெள்ளநிலைமை இது வரை 104பேர் பலி;நீரில் மூழ்கியது தலைநகர்

அசாம் மாநிலத்தில் வெள்ள நிலைமை மோசமாகி வருவதாக கூறப்படுகின்றது. இதுவரை வெள்ள அனர்த்தம் காரணமாக 104பேர் இறந்துள்ளனர்.

பிரம்ம புத்ராவில் வெள்ளம் குறைவடையாத காரணத்தினால் அசாம் மாநில தலைநகரை நீரில் மூழ்கடித்துள்ளது.1988 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தற்போது தான் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கின்றது என்று மாநில அரசு கூறியுள்ளது. இம்முறை 80 இலட்சம் மக்கள் வெள்ளத் தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 8500 கிராம மக்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளனர். தொடர்ச்சியாக போக்குவரத்து, மின்சாரம் என்பன தடை செய்யப் பட்டுள்ளது. சுப்றீம் மாவட்டத் திலுள்ள சிறையினுள் வெள்ளம் புகுந் துள்ளதால் சிலர் தப்பியோடியுள்ளனா.

# எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரதம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பொலிசாரால் கைது

தமிழக சட்டப் பேரவை வரவு செலவுக் கூட்டத் தொடரின் நாட்கள் குறைக்கப்பட்டிருப்பதாக எதிர்ப்பு தெரிவித்து சென்னை கோட்டை முன்பு எதிர்க்கட்சிகள் உண்ணாவிரதம் இருந்தனர். இவர்களை தமிழக பொலிசார் கைது செய்துள்ளனர்.

நேற்றுக் காலை சட்டப் பேரவை கூடுவதற்கு முன்னர் கோட்டை முன் கூடிய தி.மு.க காங்கிரஸ், பா.ம.க மார்ச்சிஸ் கம் யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் ஆகியவற்றின் சட்டமன்ற உறுப்பினர்கள் ஊர்வலமாகச் சென்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழக அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். பின்னர் சட்ட மன்றம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தினர்.

இதனையடுத்து இவர்களை கலந்து கொள்ளுமாறும், உண்ணாவிரதம் மேற்கொள்வது தடைசெய்யப்படுவதாகவும் தமிழக பொலிசார் தெரிவித்தனர்.

ஆனால் அதனை சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்காததையடுத்து அவர்கள் அனைவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

பின்னர் இவர்கள் அனைவரும் இரண்டு மணி நேரத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் விடுதலை செய்யப்பட்ட எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் வீதிப்போக்கு வரத்து மறியலை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளால் மட்டும் இருதரப்பு உறவை சரி செய்து விட முடியாது

~பர்வேஷ்முஷாரப்

நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளினால் மட்டுமே இந்தியா - பாகிஸ்தான் உறவுகளை சரி செய்து விடமுடியாது என்று பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இஸ்லாமாபததில் நடந்த இராணுவ நிகழ்வொன் றில் கலந்து கொண்டுள்ள பாகிஸ்தான் சனாதிபதி இந்தியா-பாகிஸ்தான் இடையேயான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

இரு நாடுகளும் பரஸ்பரம் நல்லெண்ண நடவடிக்கைகளை அறிவிப்பதன் மூலமே பிரச்சனைகளை தீர்த்துவிட முடியாது, என்று கூறிய முஷாரப் காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வு கண்டால் மட்டுமே இந்தியா பாகிஸ்தானிடையே நல்லுறவு ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.


## வீரவணக்கம்

04ஆம் ஆண்டு நீங்காத நினைவில்..........







தமிழீழ காவல்துறை உபபரி சோதகர்
**ஜெ.சந்திர மோகன்**
ஜெகசோதி. சந்திரமோகன்
நி.மு. கருநாட்டுக்கேணி, மணலாறு

தாயின்மடியில் 18.12.1978
தாயக மண்ணில்-28.07.2000

நாகர் கோவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது 28.07.2000 அன்று வீரச்சாவடைந்தார்.

தமிழீழ காவல்துறைத் தலைமைக் காவலர்
**சந்திர காந்தன்**
நாகமுத்து. சந்திர காந்தன்
நி.மு.யாழ் மாவட்டம்.
த.மு. புத்துடி கிழக்கு, விசுவமடு

தாயின்மடியில்14.08.1977
தாயகமண்ணில்28.07.2000

ஓயாத அலைகள் 03(மூன்று) நடவடிக்கையின் போது நாகர் கோவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது 28.07.2000 அன்று வீரச்சாவடைந்தார்.

இம்மாவீரர்களுக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொளகின்றோம்.

"தமிழீழ காவல்துறையினர்"

(4844)



## வீரவணக்கம்

## 03ஆம் ஆண்டு நினைவலைகள்



தமிழீழ தேசியதுணைப் படை வீரர்
**ச. ஜெயசங்கர்**
நி. மு. 157ஆம் கட்டை, பேராறு, ஒட்டுசுட்டான்.

தாயின் மடியில் 11-10-1973
தாயக மண்ணில் 21-07-2001

21-07-2001 அன்று நெடுங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தார்.



தமிழீழ தேசியதுணைப் படை வீரர்
**இ. சரவணபவான்**
நி.மு.பெரிய புளியங்குளம், மாங்குளம், த.மு. பாஸ்கரன் குடியிருப்பு ஆலங்குளம், துணுக்காய்

தாயின் மடியில் 29-06-1978
தாயக மண்ணில் 20-07-2001

20-07-2001 அன்று வெடிவைத்தகல் பகுதியில் இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தார்.



தமிழீழ தேசியதுணைப் படை வீரர்
**ப. நாகராசா**
நி.மு. 11ஆம் கண்டம், இடதுகரை முத்துஐயன்கட்டு, த.மு.முத்துஐயன்கட்டு

தாயின் மடியில் 28-11-1978
தாயக மண்ணில் 18-07-2001

18-07-2001 அன்று தண்ணிமுறிப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான தாக்குதலின்போது வீரச்சாவடைந்தார்.



தமிழீழ தேசியதுணைப் படை வீரர்
**க. மதிவண்ணன்**
நி.மு. பிரம்படி லேன், கொக்குவில், யாழ். த.மு. விஜி வீதி, அம்மன் கோவிலடி முழங்காவில்.

தாயின் மடியில் 23-01-1972
தாயக மண்ணில் 16-07-2001

16-07-2001 அன்று கொக்குத் தொடுவாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான சமரின் போது வீரச்சாவடைந்தார்.

இம்மாவீரர்களுக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணியினர்."


(4843)

# இங்கிலாந்து-மேற்கிந்தியதீவு டெஸ்ட் போட்டி; வலுவான நிலையில் இங்கிலாந்து அணி

மேற்கிந்தியதீவு அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தின் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

போட்டியின் இரண்டாம் நாளான நேற்று இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 568 ஓட்டங்களைப்பெற்றது. இங்கிலாந்து துடுப்பாட்டத்தில் றொபஸ்ரி 221 ஓட்டங்களையும் அன்ருஸ்ரோஸ் 137 ஓட்டங்களையும், மைக்கல் வோகன் 103 ஓட்டங்களையும் ,கிரகம்தோப் 19 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். இரண்டாவது விக்கெட்டுக்காக அன்ரூஸ்ரோசுடன் இணைந்து றொபஸ்ரி 291 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

லோட்ஸ் மைதானத்தில் ஸ்ரோஸ் பெற்ற இரண்டாவது டெஸ்ட் சதம் இதுவாகும். இங்கிலாந்து அணியில் இறுதியாக வந்த ஆறு துடுப்பாட்ட வீரர்கள் இரட்டை ஓட்டங்கள் பெறாது ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்கிந்தியத் தீவுகள் தனது முதலாவது இன்னிங்சை ஆடிவருவது குறிப்பிடத்தக்கது.


அன்ரூஸ்ரோஸ்

# ஆசியக் கோப்பை ப்பர்லீக் போட்டி சிறி. அணிக்கு10 விக்கெட்டுக்களால் வெற்றி

## ஜெயசூரியா சதம் அடித்தார்

ஆசியக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய சுப்பர்லீக் போட்டியில் பங்களாதேஷ் அணியை எதிர்த்தாடிய சிறிலங்கா அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து190 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் முகமட் அஷ்ரபுல் சிறப்பாக ஆடி 66 ஓட்டங்களையும், மஞ்சுளரணா 43 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சமிந்தவாஸ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு 191 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய சிறிலங்கா அணி 32.3 ஓவரில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான ஜெயசூரிய 107 ஓட்டங்களையும், குணவர்த்தன 64 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.போட்டியின் சிறப் பாட்டக்காரராக ஜெயசூரிய தெரிவானார். இதுஅவரது 35ஆவது ஆட்டநாயகன் விருதாகும்.நாளை பாகிஸ்தான், இந்தியா அணிகளுக்கிடையிலான போட்டி பிரேமதாச விளையாட்டரங்கில் பகலிரவுப் போட்டியாக நடைபெறவுள்ளது.


ஆசியக்கோப்பைக்கால்பந்துப்போட்டிகளில் கலந்து கொள்ளும் அணியொன்று பயிற்சியில் ஈடுபடுகின்றது.

# பங்களாதேஷிற்கு எதிரான டெண்டுல்கரின் ஆட்டம் அணியில் ஏனைய வீரர்களுக்கு ஒரு பாடமாகும்

-முன்னாள் வீரர் ஜவஹல் சிறிநாத்



டெண்டுல்கரின் கவனமான ஆட்டம் ஏனைய வீரர்களுக்கு ஒரு பாடமாகும் என்று முன்னாள் வீரர் ஜவஹல் சிறிநாத் கூறியுள்ளார். இந்தியா பங்களாதேஷ் ஆட்டம் குறித்து அவர் கூறியதாவது: வங்களாதேஷிற்கு எதிரான போட்டியை, அது சிறிய அணி தானே என்று நினைக்காமல் இந்திய அணி மிகவும் கவனத்துடன் அப்போட்டியை எதிர் கொண்டது. இலங்கைக்கு எதிரான போட்டியில் இந்தியா தோல்வியடைந்த பிறகு, இந்திய முன்னணி துடுப்பாட்ட வரிசை குறித்தோ அல்லது பந்து வீச்சாளர்கள் குறித்தோ கவலைப் பட்டாரோ தெரியவில்லை. நான் உறுதியாக எதையும் கணிக்க முடியவில்லை. ஆனால் பங்களாதேஷிதிற்கு எதிரான போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பிறகு களத் தடுப்பைத் தேர்ந்தெடுத்த போது, கங்குலி பந்துவீச்சுக் குறித்து அக்கறை செலுத்தியது எனக்குத் தெளிவாகப் புரிந்தது. நாளை இந்திய அணி பாகிஸ்தானை சந்திக்கவிருக்கின்றது. எனவே இந்தியப் பந்து. வீச்சு வரிசையைச் சரி செய்யும் வகையில், பங்களா தேஷை முதலில் துடுப் பெடுத்தாட களமிறக்கியது சரியான முடிவு தான். தவிர சுழற் பந்து வீச்சாளர் அனில்கும்ளேக்கு ஓய்வு கொடுத்து விட்டு ,ஹர்பஜன் சிங்கிற்கும், அஷிஷ் நெக்ரா விற்கும் சந்தர்ப்பம் அளித்ததும், நிர்வாகத்தின் நல்ல முடிவாகும்.


இந்திய அணியின் பிசியோ அண்ட்ரூ லெய்பஸ்,சாஹிர் கான் உடற்தகுதி பெற்றுவிட்டதாக அறிவித்த போதிலும், பங்களா தேஷிற்கெதிரான போட்டியில் அவரைக் களமிறக்கி, அணி நிர்வாகம் சோதிக்க விரும்பவில்லை. சர்வதேச கிரிக்கெட்டைப் பொறுத்த வரையில், பங்களா தேஷ் அணி கத்துக்குட்டி அணியாகக் கருதப்படும் ஒரு அணியாகும். இருந்தாலும் பந்து வீச்சாளர்கள் அஷிஷ் நெக்ராவும், ஹர் பஜன் சிங்கும் தங்களுக்கு வழங்கப்பட்ட பணியைச் சரியாகச் செய்தனர். இதன் மூலம் அவர் களது நிலையை தகுதியை அணித் தலைவர் எடைபோட முடிந்தது. பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியின் போது அனில் கும்ளே அணியில் இடம்பெறுவதால், மூன்றாவது வேகப்பந்து வீச்சாளரை நீக்குவதா அல்லது இரண்டாவது சுழற்பந்து வீச்சா ளரை நீக்குவதா என்பது குறித்து முடிவெடுக்கவும் பங்களாதேஷிற்கு எதிரான இப்போட்டி உதவும் என்பது நிச்சயம் எனத் தெரிவித்தார் சிறிநாத்.

# ஆசியக் கிண்ண கால்பந்துப் போட்டி யோர்தான் அணிக்கு வெற்றி

சீனாவில் நடைபெற்றுவரும் ஆசியக் கோப்பை கால்பந்துச் சுற்றுப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் யோர்தான் அணி குவைத் அணியை 2-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது.

குழு Bக்கான போட்டியாக அமைந்த இப் போட்டியின் 92,93 ஆவது நிமிடங்களில் யோர்தான் கோல்களைப் போட்டது.இப் போட்டியின் 58 ஆவது நிமிடத்தில் குவைத்தின் பைசல் இப்ராஹிம் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

# சம்பியன் பட்டம் வென்ற சரகோவாவுக்கு ஒலிம்பிக்கில் பங்கேற்க முடியாத நிலை



விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் போட்டிகளில் சம்பியன் பட்டம் வென்ற ரஷ்ய வீராங்கனை மரியாவோ சரகோவாவிற்கு எதென்ஸ் ஒலிம்பிக்போட்டிகளில் கலந்து கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது

உலக டென்னிஸ் தரப்படுத்தலில் பெண்கள் பிரிவில் 8 ஆம் இடம் வகிக்கும் சரகோவா இம் மாத முற்பகுதியில் நடை பெற்ற விம்பிள்டன் பேரட்டியில் செரினா வில்லியத்தை தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

எனினும் யூன்மாதம் 14ஆம் திகதிக்கு முன்னதாகவே ரஷ்ய ஒலிம்பிக் டென்னிஸ் அணியின் விபரம் அறிவிக்கப்பட்டது. இதில் அலஸ்ராசியா, மிஸ்கினா, டெமின்டியோவா, பெற்றோவா, டேவிட்டெனா, குஸ்ரடற்டோவா ஆகியோரின் பெயர்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

காயம் காரணமாக நால்வரில் ஒருவர் வெளியேறும் இடத்துக்கு பதிலாக இன்னொருவரின் பெயரே சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த காரணத்திற்காகவே மரியாவோ சரகோவாவிற்கு ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# 48 வருடத்திற்குப் பின்னர் ஒலிம்பிக் உயரம் பாய்தலில் இலங்கை வீரர்

சிறிலங்காவின் தேசிய உயரம் பாய்தல் வீரர் மஞ்சுளகுமார எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றுள்ளார். இவர் 2 மீற்றர் 27 சென்ரி மீற்றர் உயரத்தைத் தாண்டினார்.

உயரம் பாய்தல் போட்டிக்காக ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டாவது இலங்கை வீரர் இவராவார்.

இதற்கு முன்னர் 1956 ஆம் ஆண்டு மெல்பேர்ன் ஒலிம்பிக் போட்டியில் உயரம் பாய்தல் போட்டியில் நாகலிங்கம் எதிர் வீரசிங்கம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிணைக் கைதியான குத்துச்சண்டை வீரர் எதென்ஸ் ஒலிம்பிக்கில் போட்டியிடுகிறார்

தாக்குதல் சம்பவம் ஒன்றில் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிணைக்கைதியாகி இருக்கும் அவுஸ்திரேலியாவின் குத்துச்சண்டை வீரரான பீற்றர் வேக்பீல்ட் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவருடைய வழக்கு இந்த மாதம் நடைபெறவிருந்தது. எனினும் அது 2005 வரை ஒத்திப்போடப்பட்டுள்ளதையடுத்தும் தான் குற்றவாளியல்ல தன்னைப் போட்டிகளில் பங்கேற்குமாறு கெஞ்சிக் கேட்டதையடுத்தும் இவருக்கு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அவர் குற்றவாளி என்று நிருபிக்கப்படும் வரை அவர் போட்டிகளில் பங்கேற்கலாம் என அவுஸ்திரேலிய ஒலிம்பிக் சபை பேச்சாளர் மைக் டேயான்கர்ட் தெரிவித்துள்ளார்.

இவர் மீது 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் குற்றம் சாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.


அமெரிக்க இந்தியானோவில் நடைபெற்ற I.R.C.A சாம்பியன் போட்டியில் றொபி ஜைன்ரியை வென்ற அன்டி ரொடிக்.




# உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் நடாத்தும் 9 பேர் கொண்ட கால்பந்துச் சுற்றுப் போட்டி


உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம் நடாத்தும் அமரர் இ.பத்மேஸ்வரன் (சிவா) ஞாபகார்த்த கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் ஒரு கழகத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் கொண்ட எத்தனை அணிகளும் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அனைவரும் காலணிகளை அணிந்திருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தமது பதிவுகளை வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவனத்திலோ அன்றி உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்திலோ மேற்கொள்ளுமாறு விளையாட்டு கழகத்தினர் கேட்டுள்ளனர்.

# வலுவிழந்தோருக்கான விளையாட்டுப் போட்டி

ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தனது பயனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி ஒன்றினை எதிர்வரும் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடாத்த உள்ளது. இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் ஜெய்ப்பூர் நிறுவன பயனாளிகளை இன்றே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



### சிந்தனைக்கு

மொழி,கலை,கலாச்சாரம் என்பன ஒரு தேசிய இனத்தின் கட்டமைப்பிற்குத் தூண்களாக விளங்குகின்றன; ஒரு தேசியத்தின் ஆன்மாவாகத் திகழ்கின்றன; ஒரு தேசிய நாகரிகத்திற்கு அத்திவாரமாகின்றன.

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 24-07-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## ஜே.வி.பி.யின் கரிசனை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரில் ஒரு தரப்பினர் அதிலும் குறிப்பாக ஜே.வி.பி.யினர் தற்பொழுது கூறிக்கொள்ளும் விடயம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்தியா இதைத் தான் விரும்புகின்றது; அதைத் தான் விரும்புகின்றது; இந்தியா அதை விரும்பவில்லை; இதை விரும்பவில்லை என்பதே ஆகும்.

ஆனால் வெளிப்படையாக இந்தியா இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் எனக் கூறுகின்றது. நோர்வே ஏற்பாட்டாளருக்கு தமது ஆதரவை வழங்கத் தயாராக உள்ளது எனவும் தெரிவிக்கின்றது. இந்தியா வெளிப்படையாகக் கூறிக் கொள்வதற்கும் அதன் நடவடிக்கைக்கும் இடையில் வேறுபாடு இருக்கலாம். இல்லாது போகலாம். இது அரசியலிலில் சாதாரணமானதொரு விடயம். இதேவேளை இந்தியாவின் நடவடிக்கைகள் அதன் அறிவிப்புக்களுக்கு மாறானதாக இருக்குமானால் அதனால் தம் மீதான அவநம்பிக்கைகயைத் தேடிக் கொள்ளப் போவது இந்தியாவே ஒழிய நாமல்ல.

ஆனால் இந்தியாவின் பேச்சாளர்களாக, இந்தியாவின் நலன் விரும்பிகளாக, இந்தியாவின் நன்மை தீமைகளில் பங்காளர்களாக/ அனுதாபிகளாக ஜே.வி.பி.யினர் மாறியுள்ளமைதான் வேடிக்கையானதாகவுள்ளது.

ஏனெனில், ஜே.வி.பி.யினருக்கு இக்கரிசனை எப்படி வந்தது? இந்தியாவில் இருந்து வந்த விஜயனின் வழித்தோன்றல்கள் சிங்களவர்கள் என்ற வரலாற்றின் பாற்பட்டுவந்தா? அன்றிஅண்டை பெரிய நாட்டுடன் நட்புறவாக இருக்க வேண்டும் என்ற புவிசார் அரசியல் சிந்தனையின் வெளிப்பாடா?

ஆனால், அவ்வாறு இருப்பதற்கு வாய்ப்பில்லை ஏனெனில் ஜே.பி.வி.யின் ஸ்தாபகரும் முன்னாள் தலைவருமான ரோகணவிஜய வீரவிற்கு முன்னதாகவே இவை இரண்டும் அறிப்பட்டவையாகவே இருந்தன. ஆகையினால் அவர்களின் முன்னாள் தலைவர் ரோகணவிஜய வீர இந்தியாவையே தனது முதல் பகை நாடாகக் கருதினார்.அவரின் முதலாவது அரசியல் வகுப்பே இந்தியாவின் விஸ்தரிப்பு வாதம் என்ற ரீதியில் அதற்கு எதிரானதாகவே இருந்தது.

முதல் தடவை கிளர்ச்சி தோல்வி அடைந்த பின்னரும் கூட அவர்கள் இந்திய எதிர்ப்பு வாதத்தைக் கைவிட்டதாக இல்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பாக இந்தியா-சிறிலங்கா அரசுடன் 1987இல் சமாதான உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டபோது அதனை முதலில் தீவிரமாக எதிர்த்து வன்முறையில் இறங்கியவர்கள் ஜே.வி.பி.யினரே.

இவர்கள் புரிந்த வன்முறையால் ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிர அக்கறை காட்டிய அவர்கள் இந்தியப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் தடை விதித்தனர். அதனை மீறுவோர் மீது கடும் தண்டனை விதிக்கப்படும் என அச்சுறுத்தினர். தமது நிலைப்பாடுகளுக்கு எதிரானவர்கள் என்றவகையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் சவ அடக்கத்தைக் கூட கௌரவமான முறையில் நடாத்துவதற்கு இவர்கள் அனுமதிக்கவில்லை.

இந்தவகையில் இந்தியா-சிறிலங்கா சமாதான உடன்பாட்டிற்கு எதிரான வன்முறையில் இறங்கியவர்களும் அந்த உடன்பாடு நிறைவேற்றப்படாமல் போனதற்கு ஆரம்பத்தில் முட்டுகட்டையாக இருந்தவர்களும் இவ் ஜே.வி.பி.யினரே ஆகும். இத்தகையுவர்கள் இன்றோ இந்தியாவின் விரும்பத்திற்கேற்பவே சிறிலங்கா அரசு செயற்படவேண்டும் இனப்பிரச்சினைக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியமானது எனக் கூறுவது இவர்களின் வேடத்தனத்தைக் காட்டுகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் ஒத்துழைப்பு, பங்களிப்பு என்பது அனைவராலும் வரவேற்கப்படும் ஒன்றாகவே இருக்கின்றது.ஆனால் இந்தியாவின் விருப்பமே இனப்பிரச்சினைக்குத் தீர்வெனில் சிறிலங்கா அரசாங்கம் என்பது எதற்காக? சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை என்பது எதற்காக? இந்தியாவுடன் அல்லவா இனப்பிரச்சினைத்தீர்விற்கு பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படவேண்டும்.?

ஜே.வி.பி. பேரினவாதத்தை தனது அரசியல் மூலதனமாக்க முற்பட்டபோதே அது தனது கடந்த கால அரசியல் சித்தாந்தங்கள், கோட்பாடுகள் என்பவற்றை காற்றில் பறக்கவிட்டுவிடும் என்பது எதிர்பார்க்கத்தக்கது தான். ஆனால் இதற்காக ஜே.வி.பி. இந்தியாவுடன் நட்புறவு பாராட்டுவதையோ அமெரிக்காவுடன் உறவுகளை வளர்த்துக் கொள்வதையோ இங்கு நாம் குறைகூறவில்லை. ஆனால் ஜே.வி.பி தனது இடதுசாரி சித்தாந்தங்களைப் பேசுவதை நிறுத்திக் கொள்வது நல்லது அவ்வாறு இல்லாதுவிடில் ஜே.வி.பி. மேலும் மேலும் அவமானப்படவும், அசிங்கப்படவும் வேண்டியிருக்கும் ஏனெனில் கொள்கைக்கும் செயற்பாட்டிற்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துவிடும்.

# பேரினவாதிகளின் இனவாத முயற்சிகள் அவர்களுக்கே இழப்பை ஏற்படுத்தும்

### யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி

தமிழ்மக்களது அமைதியை குலைக்கும் நோக்குடன் தென்னிலங்கை பேரினவாத அரசியற் தலைமைகள் மேற்கொள்ளும் இனவாத முயற்சிகள் பேரினவாதிகளுக்கே பேரழிவையும், இழப்பையும் ஏற்படுத்தும்.

இவ்வாறு நேற்றிரவு யாழ். நல்லூரில் உள்ள சங்கிலியன் தோப்பில் இடம்பெற்ற மாவீரர் லெப்.செல்லக்கிளிஅம்மானின் நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி தெரிவித்தார்.

தற்போதுள்ள அமைதிச் சூழ் நிலையைப் பயன்படுத்தி இனவாத அரசதலைமைகளான ஜே.வி.பியினர் பொதுசன ஐக்கியமுன்னணி ஐக்கிய தேசியக்கட்சி ஆகியன தமது இனவாத அரசியலை அரங்கேற்றி தமிழ் மக்களுடைய எதிர்காலத்தில் விளையாட முனைகின்றன.

இதற்காக துரோகி கருணா உட்பட தமிழ்த் தேச விரோதிகளை தமது கையாட்களாகப் பயன்படுத்தவும் இதன் மூலம் தமிழர்களிடையே பிளவுகளை ஏற்படுத்தவும் திட்டமிட்டுள்ளன.

அத்துடன் புலிகளையும், மக்களையும் வேறுபடுத்த பல்வேறு சதி முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

எவ்வாறாயினும் தமிழ் மக்களது அமைதியைக் குழப்பி விட பேரினவாதிகள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் அவர்களுக்கே குழப்பத்தையும், இழிவுகளையும் உருவாக்கும் என்பது தமிழீழ போரா்ட்ட வரலாறு அவர்களுக்கு உணர்த்தியுள்ள பாடமாகும்.

எனினும் தமிழீழத் தேசிய தலைவரும், புலிகள் இயக்கமும் தமிழீழ மக்களுக்கு ஓர் விடிவினை ஏற்படுத்த முயற்சித்துச் செயற்படும் இந்த வேளையில் மக்களும் இனவாதிகளது செயற்பாடுகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரித்தார்.
(33)

# சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதில் நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் சிக்கல்

### அரசாங்க சமாதானச் செயலகப் பணிப்பாளர் தெரிவிப்பு

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் இரு முக்கிய சிக்கல்கள் காணப்படுவதாக அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை ஒருங்கிணைக்கும் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதே இதில் முதன்மையானது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதனைத் தவிர கருணா விவகாரமும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் விடயத்தில் சிக்கல்களை தோற்றுவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கும் திகதி மற்றும் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் அரசாங்கத்திடமிருந்து எழுத்துமூல இணக்கப்பாட்டைக் கோரியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இருந்த போதிலும் கடந்த ஜுன் மாதத்தில் சனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், இது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். வடக்கு - கிழக்கு புனர் நிர்மாணம் மற்றும் உடனடி மனிதாபிமானத் தேவைகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக பேச்சுவார்த்தையை நடத்த தயாராகவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இதற் காக முன்வைக்கப்படும் யோசனைகள் இறுதித்தீர்வை நோக்கிச் செல்வதற்கான எதிர்பார்ப்புடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டினார். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக அமைய மாட்டாது . நாளை நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் இலங்கைக்கு வரவுள்ளார். சமாதான முற்சிகளை ஒருங்கிணைக்கும் பணிப்பாளரின் கருத்திற்கு அமைய இந்த விஜயம் மிகவும் தீர்க்கமான விஜயமாக அமைந்துள்ளது. கடந்த சில மாதங்களாக நோர்வே அனுசரணையாளர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தேவையான அடிப்படை விடயங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### -நுண்கலைப் பீட மாணவர்களை-

# இராணுவக் களியாட்ட நிகழ்வில் கலந்துகொள்ள நிர்ப்பந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினரால் நடத்தப்படும் களியாட்ட நிகழ்வுகளில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்கள் கட்டாயமாக பங்குகொள்ள வேண்டும் என நிர்ப்பந்திக்கும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பல்கலைக்கழகத்தின் நுண்கலை மாணவர்களைச் சந்தித்த படையினரே இவ்வாறு நிர்ப்பந்தித்த போதும் மாணவர்கள் இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதுடன் படையினர் பல்கலைகழக மாணவர்களைத் தமது விருப்பத்திற்கு ஏற்ப நடத்த முனைந்தமைகுறித்து கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்மாணவர்களுக்கு பாதுகாப்புவலய நடைமுறைகுறித்து கடும் இராணுவ கெடுபிடிகள் என்பனவாயிலாக பல்வேறு நெருக்கடி நிலைகளுக்கும் ஆளாக்கி வரும் சிறிலங்காப் படையினரது இந் நிர்ப்பந்தமானது மாணவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியாத கீழ்த்தரமானதொன்றாகும் என அவர் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.
(36)

# கஜேந்திரனின் உரை தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும்

### ஆளும் கட்சி, ஹெலஉறுமய கோரிக்கை

பாராளுமன்றத்தில் அண்மையில் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஆற்றிய உரை தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு சபாநாயகரிடம் அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்களும் கடிதம் மூலம் நேற்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம் மாதம் 20ஆம் திகதி கஜேந்திரன் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள 22 ஆயிரத்திற்கும் அதிகமான இராணுவத்தினர் கொழும்பிற்கு சவப்பெட்டிகளில் அனுப்பப்படுவார்களென அவர் கூறியதாக கூறப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் சட்ட திட்டங்களுக்கு சவால் விடுக்கக் கூடிய வகையில் இவ்வாறான கூற்றுக்களை பாராளுமன்றத்தில் தெரிவிக்க இடமளிக்க கூடாதென கேட்டுள்ளனர்.

சபாநாயகர் தனது அலுவலகத்தில் இல்லாததால் இக்கடிதம் அவரின் இணைப்புச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

# கிணற்றுள் வீழ்ந்து குடும்பப் பெண் பரிதாபகரமாக உயிரிழப்பு

எட்டாம் வாய்க்கால் பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் கிணற்றினுள் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தின் போது நல்லதம்பி இலட்சுமிகாந்தி என்ற ஐந்து பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு மரணமானவராவார்.இவரை வீட்டில் காணாததால் எல்லா இடமும் தேடியதாகவும் பின்னர் மூன்று நாட்கள் கழித்து நேற்றைய தினம் வளவுக்கிணற்றில் அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டு மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டது.
(கு)

# இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே மட்டு. படுகொலைகளுக்கு காரணம்

## -ஜோசப்பரராசசிங்கம் சந்திரிகாவிடம் தெரிவிப்பு

மட்டக்களப்பில் அண்மையில் நடைபெற்று வரும் கொலைகளில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினர் ஈடுபட்டுவருவதாக சனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவித்துள்ளதாக தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; உண்மையில் சமாதான முயற்சிகளை விரும்பாதவர்களும் தற்போதுள்ள யுத்த நிறுத்தத்தை விரும்பாதவர்களும் இதனைக் குழப்ப வேண்டுமென நினைக்கும் தீய சக்திகள் எல்லாம் ஒன்றிணைந்து சமாதான முன்னெடுப்பை முறியடிக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக அவர்கள் செயற்படுகின்றார்கள். இது தொடர்பாக எங்களுடைய செயற்பாடுகளை மிகவும் இறுக்கமாக அரசிற்கு தெளிவுபடுத்தி வருவோம் எனவும் தெரிவித்த அவர், தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் தமிழீழத் தாயகம் என்பதையே தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார்கள்.

ஆனால் தற்போது சமஷ்டி அமைப்பிற்கு இணங்கி வந்துள்ளார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என்பதையும் அவர் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின் போது வலியுறுத்தியதாகவும் முக்கியமாக இந்த இடைக்கால நிர்வாக அதிகார சபையை அடிப்படையாக வைத்துத்தான் பேச்சுவார்த்தைஆரம்பிக்கப் படவேண்டுமென்பது தங்களுடைய கருத்தும் விடுதலைப்புலிகளின் கருத்துமெனவும் தெரிவித்த அவர்,

இந்த இடைக்கால நிர்வாக அதிகார சபை இயங்க ஆரம்பித்ததுடன் அதன் பின்னர் தமிழர்களுடைய பிரச்சினை சம்பந்தமாக அந்தப் பெரிய பிரச்சினை ஆராயப்படலாம் எனவும் தாங்கள் வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிரேதப் பெட்டியுடன் ஈ.பி.டி.பியினர் நோர்வேத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் முன் நேற்று ஈ.பி.டி.பி.யினர் பிரேதப் பெட்டியுடன் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட ஆலையடி வேம்பு பிரதேச சபைத் தலைவரான கமலன் என அழைக்கப்படும் வேலாயுதம் இரவீந்திரனின் பிரேதப் பெட்டியுடன் அவர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தள்ளாடி முகாம் இராணுவத்தினர் சுடுகலன் பயிற்சி; காப்பரண் புதுப்பிப்பு

மன்னார் மாவட்டம் தள்ளாடி இராணுவ முகாம் இராணுவத்தினர் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. தள்ளாடி இராணுவ முகாமில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் தினமும் சுடுகலன் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதையும் தள்ளாடியில் இருந்து மதவாச்சிக்குச் செல்லும் பிரதான பாதையில் உள்ள காப்பரண்கள் யாவும் புதுப்பிக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்டு வருவதையும் பாதையின் ஓரங்களில் புதிதாக வேலிகள் அமைத்து அவை பனை ஓலைகளால் அடைக்கப்பட்டு வருகின்றமையையும் அவதானிக்க முடிகின்றது. அதேவேளை மன்னார் நகர்ப்புற பகுதிகளில் படையினர் நாளாந்தம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### யாழ்.இல்...

இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை 2 ஆம் லெப்டினன்ட் அமுதவாணனின் தந்தை பரமராஜா, லெப் கேணல் செல்வக்குமாரின் தந்தை சிங்கராஜா, நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பாலகுமாரன், மற்றும் வர்த்தக சங்கத்தலைவர் ரூபன், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை இணைப்பாளர் கண்ணன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றிவைத்தார். இதனைத்தொடர்ந்து திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை செல்லக்கிளி அம்மானின் சகோதரரும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான சதாசிவம் கனகரத்தினம் ஏற்றி, மலர் மாலையினை அணிவித்தார். தொடர்ந்து சிறப்புரையினை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, ரெலோ அமைப்பின் முதல்வர் சிறிகாந்தா வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஆகியோர் நிகழ்த்தினர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் செல்வக்குமார் உரையாற்றுகையில்:-

பாடசாலை மாணவர்கள் புலிகளின் நிகழ்வுகளில் பங்குபற்றக் கூடாதென அண்மையில் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி ஓர் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார். இவரது கருத்தைப் பார்க்கின்ற வேளை புலிகளும், மாணவர்களும் வேறானவர்கள் அல்ல என்பதையே இது உணர்த்துகின்றது. எமது மண்ணுக்காக, மக்களுக்காக நடத்தப்படுகின்ற நிகழ்வுகளில் மாணவர்கள் கலந்து கொள்வதை யாரும் தடுக்க முடியாதென தெரிவித்துள்ளார்.

எமது மண் விடியும் வரையும் எமது மக்களுக்கு சுபீட்சமான சுதந்திரமான வாழ்வு கிடைக்கும்வரையும் மாணவர்களின் பங்களிப்பு இப்போராட்டத்திற்குக் கிடைக்கும். இதனை யாராலும் தடுக்க முடியாதென வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இந்நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட மாணவர்கள்,பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

### புதுக்குடியிருப்பு...

கலந்து கொண்ட பிரதம விருந்தினர்கள் புதிய மருத்துவமனைச் செயற்பாட்டைப் பார்வையிட்டனர்.

இதனை அடுத்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. வரவேற்பு நிகழ்வாகப் பரதநாட்டிய நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து டாக்டர் சிவபாலன் தலைமையுரை நிகழ்த்தினார். இதனை அடுத்து கவிதை வாசிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்,அவர்கள் விருந்தினர்உரைநிகழ்த்தினார் தொடர்ந்து டாக்டர் கெங்காதரன் உரைநிகழ்த்தினார். இதனிடையே கட்டட வேலையை மேற்கொண்டவர்களுக்கு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனைகளின் பணிப்பாளரான மனோச் அவர்கள் பரிசுப்பொருட்கள் வழங்கிக் கௌரவித்தார். தொடர்ந்து சிறப்புரையைத் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் ஆற்றினார். இறுதியாக நன்றியுரையை மருத்துவப் போராளி அன்பழகன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் ரே கா, தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் வீரத்தேவன் உட்பட வைத்தியர்கள் வைத்தியத்துறை சார்ந்தவர்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

(லோ.08)

### கதிரவெளியில்...

என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் வலியுறுத்துகின்றனர். அத்துடன் இக்கொடூர துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி பலியானவரின் குடும்பத்திற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றனரென தெரிவிக்கப்படுகிறது.

### தேசியத்தலைவரின்....

எமது மக்களையும் காப்பாற்றுகின்ற பணியை எமது மருத்துவப்பிரிவு செம்மையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதற்கமைவாக எமது மருத்துவர்கள் மிகவும் கஸ்ரமான சூழ்நிலையில் பெரும் சுமையை மிகக் குறைந்த விரல்விட்டு எண்ணக்கூடிய மருத்துவர்கள் இதனைத் தாங்கி நின்றார்கள். உண்மையில் அன்றைய நாட்களை இலகுவில் மறந்துவிட முடியாது.

எதிரியின் அனைத்து நெருக்குவாரங்களையும், அழுத்தங்களையும், பாரிய அச்சுறுத்தல்களையும் நாம் எதிர்கொண்டு நிற்கின்றபோது கொடிய நோய்களும் எம்மை அச்சுறுத்தத்தவறவில்லை. அப்படியான சூழலில் எமது மருத்துவப்பிரிவினுடைய வரலாற்றை நாம் நினைத்துப்பார்க்கின்றோம்.

இன்று புதுக்குடியிருப்பில் நடைபெறுகின்ற பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைக் கட்டடத் திறப்பு விழாவை நாம் வெறும் கட்டடத்திறப்பு விழாவாகப் பார்க்க வில்லை. எமது மருத்துவப் பிரிவின் ஒரு பாய்ச்சலான படிக்கல்லாகவே பார்க்கின்றோம். இந்த கட்டடத்தைப்பற்றி பேசுவதை விட உள்ளே என்ன நடக்கிறது என்பதைப் பற்றியே பேசுவதுதான் பொருத்தமாயிருக்கும்.

எமது போராட்டம் எப்போது முனைப்புப்பெற்றதோ அப்போதிருந்தே எங்களுடைய தலைவர் மருத்துவப்பிரிவினுடைய வளர்ச்சியிலும் கூடிய அக்கறை செலுத்தினார். போராட்டத்தின் அதி உச்சப் பக்கமாக எங்கள் மருத்துவப் பிரிவின் வளர்ச்சியில் தலைவர் கவனமெடுத்தார்.

ஆரம்பத்தில் நாம் தமிழ் நாட்டைத் தளமாகக் கொண்டிருந்தோம். தமிழ்நாட்டில் தளமாக கொண்டிருந்த காலத்தில் பல வைத்திய கலாநிதிகள் எம்முடன் சேர்ந்து பணியாற்றினார்கள். அவர்களிடம் எமது தலைவர் எமக்கென மருத்துவப்பிரிவு அமைக்க வேண்டும். அதற்காக போராளிகளைக் கற்பிக்க வேண்டுமென்று கேட்டு அவர்களுக்கு மருத்துவக் கல்வி ஊட்டி அன்றே எமது போராட்டத்துக்கான வலுவான அடித்தளத்தை இட்டார். எங்கள் தேசியத்தலைவர் அன்றைய காலத்தில் தீர்க்க தரிசனமாக சிந்தித்ததன் விளைவுதான் பின்னைய காலத்தில் போர் எங்களை ஆக்கிரமிக்க முற்பட்டபோது, எதிரி எம்மை முற்றாக அழிக்க முற்பட்டபோது நாங்கள் அதற்கு தாக்குப்பிடித்து எங்களுடைய மக்களையும் எமது போராட்டத்தையும், போராளிகளையும் காக்க துணை புரிந்தது. உண்மையில் எங்கள் வைத்தியர்கள் பட்ட துன்பங்கள் சாதாரணமானவை அல்ல. எமது தலைவர் ஒவ்வொரு துறைகளிலும் கூடிய கவனம் எடுத்து முன்னெடுத்து வந்ததால்தான் நாம் இன்று இப்படியான மாற்றத்தை காண்கின்றோம்.

உண்மையிலே நாம் இன்று ஒரு பெரும் வளர்ச்சியைநோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம். எமது விடுதலைப்போராட்டத்துக்கு ஒரு புதுவித அத்தியாயம் இருக்கிறது. எல்லா நாடுகளிலும் போராட்டம் நடந்து பெரும் அழிவுகள் எல்லாம் நிகழ்ந்து ஆக்கிரமிப்புக்களில் இருந்து விடுபட்டதன் பின்னர் தான் நாடு வளர்ச்சியை நோக்கி முன்னேற்றமடைந்து செல்லும். ஆனால் எங்களுடைய விடுதலைப் போராட்டத்தைத் தலைவர் ஆரம்ப காலத்தில் இருந்தே எதிரியை எமது மண்ணில் இருந்து விரட்டி அடிக்கின்ற சமகாலத்திலேயே எமது தாயகத்தின் அனைத்துத் துறைகளையும் கட்டியெழுப்புவதை முன்னெடுத்து வந்ததால் தான் நாம் போராட்ட காலத்தில் எமது இருப்பை தக்கவைக்கின்றோம். அதனால் தான் எங்கள் மக்களின் வாழ்க்கைநிலையை ஓரளவேனும் பாதுகாத்துக் கொள்ள முடிகிறது.

இன்று எமது மருத்துவப் போராளிகள் ஒவ்வொரு வீடுவாசலிலும் நிற்கிறார்கள். தலைவரின் சிந்தனையில் உருவான திலீபன் மருத்துவசேவை இன்று எவ்வித வசதிகளுமில்லாத அடிமட்ட கிராமங்களிலே வாழ்கின்ற மக்கள் மத்தியில் மருத்துவ சுகாதார விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி அந்த மக்களுக்கு அங்கேயே சிகிச்சைகளை வழங்கி பாரிய நோய்த்தாக்கங்களில் இருந்து தப்புகின்ற ஒரு மார்க்கத்தை உருவாக்கியிருக்கிறார். இதனை இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒரு படிப்பினையாக எடுக்கவேண்டியிருக்கிறது.

எமது மருத்துவர்களின் கடமை உணர்வு, அர்ப்பணிப்பு, அவர்களின் செயற்திறன் என்பவற்றால் நாம் இன்று மருத்துவத்துறையில் வளர்ச்சியடைந்திருக்கிறோம். தென்னிலங்கையில் சகல வசதிகளும் இருந்தும் அவர்கள் திணறிக்கொண்டிருக்கிறார்கள்.

நாம் யாழ்ப்பாணத்தை விட்டு தந்திரோபாயரீதியாக பின்வாங்குகின்றபோது எதிரி நினைத்திருந்த பல விடயங்களில் விடுதலைப்புலிகள் வைத்திய ரீதியாக பெரும் பின்னடைவை சந்தித்துவிடுவார்கள். எனவே இவர்கள் இனிமேல் மரபுவழித்தாக்குதல்கள் எத்தனையும் மேற்கொள்ள முடியாது. சிறு சிறு தாக்குதல்களை மேற்கொண்டு அழிந்து விடுவார்கள். மருத்துவ ரீதியாக இவர்களால் இனி எதுவும் செய்துவிட முடியாது என்று நினைத்துக் கொட்ட மடித்தார்கள். இவர்களின் எண்ணத்தை எல்லாம் சிதறடிக்கும் வகையில் நாம் எதிரிக்கு ஒரு புதிய செய்தியைக் கொடுத்தோம். அதுதான் முல்லைச்சமர். நாம் மருத்துவ ரீதியாக எவ்வளவு பலம் பெற்றிருக்கிறோம் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தினோம்.இன்று புலம்பெயர் நாடுகளில் இருந்து பெருமளவான வைத்தியர்கள் இங்கு வந்து பெரும்பணி யாற்றுகிறார்கள். எமது அடுத்தகட்ட வளர்ச்சிக்குப் பெரும் தூண்களாக நின்று செயற்படுகிறார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(லோ,08)

### தனது....

மூலம் தனது பதவியை சிறிது காலம் நீடிக்கலாமென எதிர்ப்பார்த்திருந்த சந்திரிகா, அது சாத்தியப்படாததையடுத்து மற்றுமொரு முனையில் களத்தில் இறங்கியுள்ளார்.இதன் பிரகாரம் விடுதலைப் புலிகள் பற்றிய பயப்பிராந்தியை தென்னிலங்கையில் ஏற்படுத்தி அதன் மூலம் பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுனையும் சந்திரிகா அவ்வாறு பெரும்பான்மையைப் பெற்று சனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து சகல அதிகாரமும் கொண்டபாராளுமன்ற அரசை மீண்டும்ஆட்சிக்கு கொணர வழிவகுத்து அதில் தான் பிரதமராக இருக்க விருப்பம் தெரிவித்து அதற்கான வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

குறிப்பாக இதற்கான முன்னெடுப்புக்களை சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை, இது பற்றி சர்வதேச நாடுகளுடனான இராஜதந்திர கருத்துப் பகிர்வை மேற்கொள்வதற்கு அவர் தனது இராஜதந்திரப் பணியாளர்களிற்கு உத்தரவிட்டுள்ளார்.


மணிமேகலை பிரசுர வெளியீடுகள்
புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்
இடம்:- கிளி. மகாவித்தியாலயம் (கனிஷ்ரா)
நாள்:- 24.07.2004 இன்று பி. பகல் 1 மணிக்கு
மணிமேகலை பிரசுர நிர்வாக இயக்குனர்
ரவி தமிழ்வாணன் கலந்து கொள்வார்.
(சி-10034) - அறிவமுது நிறுவனம்.



கோடைகால ஜில்சொப்பிங்
* முகூர்த்தப்பட்டுச் சாறிவகைகள்
* வெளிநாடுகளில் இருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன்களில்
* சாறிவகைகள் * சேட்,T.சேட் * சூட்வகைகள்
* ஜம்பர்வகைகள் *ரவுசர்த்துணிவகைகள் * கவுண்வகைகள்
* டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள் *கோட்சூட்
* ஸ்கேட் & பிளவுஸ் வகைகள் * பேபி கவுண் வகைகள்
போன்றவற்றை
தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள
மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்
T.P.:0214590174
இல.10,மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(சி.9757)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம்24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.